(475) (29)

மு.கு.—15.01.93 ஆந் திகதிய 750 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி IV (அ) ஆகியவற்றில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 751 –1993 ජනවාරි මස 22 වැනි සිකුරාදා – 1993.01.22

751 ஆம் இலக்கம் - 1993 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | — |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | — |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 22 |
| மாகாண சபைகளின் நானாவித அறிவித்தல்கள் | — |
| பதவிகள் - வெற்றிடம் | — |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | — |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | — |
| நானாவித அறிவித்தல்கள் | — |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான "அறிவித்தல்" களுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவித்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 1993, சனவரி 29 வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 1993, சனவரி 15 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

நெவில் நாணயக்கார,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
1993 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் தேதி.

எனது இல. : மமாச/ ஏ/ 12/ 90 (viii).

மத்திய மாகாண சபை

மேலே கூறப்பட்ட நியதிச் சட்டம், 1992 மே மாதம் 06 ஆம் திகதி நடைபெற்ற மத்திய மாகாண சபையின் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதோடு, இல. : ஜீசீபி/ ஏஎஸ்/ 3 உம் 1992 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியும் கொண்ட கடிதத்தின்படி, அதற்கு மத்திய மாகாணத்தின் கௌரவ ஆளுநருடைய அங்கீகாரம் கிடைத்துள்ளது என இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீ. ஆர். ரணசிங்க,
சபைச் செயலாளர்,
மத்திய மாகாண சபை.

சபைச் செயலகம்,
மத்திய மாகாண சபை,
தபால் பெட்டி 92,
பள்ளேகலை,
குண்டசாலை,
1992, நவெம்பர் மாதம் 6 ஆம் திகதி.

மத்திய மாகாண மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டம்

கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கான விதிப்பிரமாணங்களை ஆக்குவதற்கும், கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிப்பதை பதிவுசெய்வதற்கு, நிர்வகிப்பதற்கு உள்ள சட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் திருத்துவதற்கும், இதனோடு தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான கருமங்களுக்குரிய விதிப்பிரமாணங்களை ஆக்குவதற்குமான நியதிச்சட்டமாகும். இந்நியதிச்சட்டம் 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க மசோதாவுடன் பொருந்தாது.

சுருக்கப் பெயர்.

1. இந்த நியதிச் சட்டம், மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 10/ 1990 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டம் எனப்படும்.

## I ஆம் அத்தியாயம்

### பதிவுசெய்தல்

பதிவாளர், பிரதிப் பதிவாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், உதவிப் பதிவாளர் நியமனம் வழங்குதலும்.

2. (1) இலங்கையின் மத்திய மாகாணத்திற்கான கூட்டுறவுச் சங்க பதிவாளரொருவர் தேவைப்படுமிடத்து பிரதி சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அல்லது உதவிப் பதிவாளர் பலர் நியமிக்கப்படலாம்.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினதும், அந்த ஆணையாளருக்கு உதவிக்காக நியமிக்கப்படும் ஆளொருவரினதும் அதிகாரங்கள்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்டதான உபவிதிகளின் கீழ் பதிவாளர் பால் சார்ந்துள்ள அதிகாரங்கள் சகலவற்றை அல்லது/ அவற்றுள் சிலவற்றை, மத்திய மாகாண சபையின் கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரானவர், பிரதி சிரேஷ்ட உதவி அல்லது/ உதவிப் பணிப்பாளர்களுக்கு சாதாரண அல்லது விசேடக் கட்டளைகள் மூலம் வழங்கலாம்.

(3) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களாக அல்லது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஒருவரின் கடமையை மேற்கொள்வதற்காக நியமிக்கப்படும் ஆளொருவருக்கு, இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்டதான உபவிதிகளின் கீழ், அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் உபவிதிகளின் கீழ் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் பால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தும் உரித்தாதல் வேண்டும் என்பதுடன் அவற்றால் அவ்வதிகாரங்கள் பிரயோகிக்கப்படலாம்.

(4) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் உதவிக்காக நியமிக்கப்படும் ஒவ்வோர் ஆளுக்கும், இந்நியதிச் சட்டத்தின் கீழான, அல்லது அதன் கீழாக்கப்படுவதான உபவிதிகள், அல்லது அவ்வாறு ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் உபவிதிகளின் கீழ் உள்ளதான பதிவாளர் ஒருவரின் அதிகாரங்களில், மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பொதுவாக அல்லது விஷேடமாக விதந்துரைக்கப்படுவதான அதிகாரங்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வதிகாரங்களை பிரயோகிக்கவும் கூடியதாகலாம்.

3. (1) இந்நியதிச் சட்டத்தின் இதன் பின் எடுத்துக் காட்டப்படுவதான ஏற்பாடுகளுக்கமைவாக— பதிவு செய்யக்கூடிய சங்கங்கள்.

(அ) சங்க அங்கத்தவர்களின், பொருளாதார, சமூக கலாச்சார எதிர்பார்ப்புகளை, கூட்டுறவுக் கொள்கைகளுக்கிணங்க மேம்பாடடையச் செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு சங்கம் ; அல்லது

(ஆ) உட்பிரிவிட் காட்டப்பட்டதான நோக்கத்தினை இலகுவாக்குதற் பொருட்டு அமைக்கப்பட்டதான சங்கமொன்று ; அல்லது

(இ) கூட்டுறவுக் கல்வியும், பயிற்சியும் வழங்கல், மத்திய மாகாண கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஆலோசனைச் சேவைகளை வழங்கல், மத்திய மாகாண கூட்டுறவு இயக்கத்தினை அபிவிருத்தி செய்வதற்காக வேறு சேவைகளை வழங்கல் எனும் நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களை அங்கத்தவர்களாகக் கொண்டதுமான சங்கமொன்று ; அல்லது

(ஈ) சந்தைப்படுத்தல் கைத்தொழில், விவசாயம், மீன்பிடித்தொழில் அல்லது பதிவாளரால் அனுமதியளிக்கப்பட்ட வேறு செயற்பாடொன்றில் ஈடுபட்டுள்ளதும், அல்லது மத்திய மாகாணத்தின் அல்லது அதன் ஒரு பகுதிக்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், ஒன்றிணைத்தல், இலகுவாக்கல் நோக்கத்திற்காகத் தாபிக்கப்பட்டதான சங்கங்களை அங்கத்தவர்களாகக் கொண்ட சங்கமொன்று

வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்டதான அல்லது அவ்வாறற்றதான சங்கமாக இந்நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படலாம்.

எனினும், பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று அங்கத்துவம் வகிப்பதான சங்கமொன்றினைப் பொறுத்தமட்டில் அதன் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டதாயமைதல் வேண்டும்.

(2) சங்க அங்கத்தவர்களின் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளவிடத்து அச்சங்கத்தில் அங்கம் வகிக்கும், பதிவு செய்யப்பட்ட சங்கம் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர்களின் பங்குகள், அச்சங்கத்தின் முழு முதலீட்டின் ஐந்தில் ஒரு பங்குக்கும் கூடாததாக அச்சங்க யாப்பு விதிகளின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாயமைதல் வேண்டும்.

4. (1) பதிவு செய்யப்பட்ட சங்கங்களை அங்கத்தவர்களாகக் கொண்ட சங்கம் தவிர்ந்த ஏனைய சங்கங்கள், பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராயும் அவ்வாறான பதிவு செய்யப்பட வேண்டிய சங்கம் இயங்கவிருக்கும் நிலப்பரப்பு எல்லைக்குள் வசிப்பவர், அல்லது தொழில் புரிபவர் அல்லது அசையாச் சொத்துக்களையுடைய வருமானம் குறைந்தபட்சம் பத்து அங்கத்தவரையேனும் கொண்டிராதவிடத்து அச்சங்கம், இந்நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படலாகாததாதல் வேண்டும். பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்.

(2) இப்பிரிவின் கீழான நடவடிக்கைகளுக்காக எவரேனும் ஆளொருவரின் வயது, வதிவிடம், தொழில், சொத்துரிமை எனும் தகைமைகளில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக பதிவாளர் தீர்மானம் எடுத்தல் வேண்டும். பதிவாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் இறுதியானதாகும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதான மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களையுடைய சங்கங்கள் அனைத்தும், தனது சங்கப் பெயருக்கு முன்னால், "மட்டுப்படுத்தப்பட்ட" எனும் சொல்லைக் கொண்டதாயமைதல் வேண்டும். அல்லாதவிடத்து அதன் சிங்கள, ஆங்கில சம பொருள்படும் சொல்லினைக் கொண்டமைதல் வேண்டும்.

5. (1) பதிவு செய்து கொள்ளல் பொருட்டு விண்ணப்பமொன்று பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) அவ்வாறான விண்ணப்பம்—

(அ) அச்சங்கத்தின் உறுப்பினருள் ஒருவரேனும் பதிவு செய்யப்பட்ட வேறு ஒரு சங்கமாக வில்லாதவிடத்து, இதன் 4.1 பிரிவிற்கமைய தகைமை பெற்ற அங்கத்தவர் குறைந்தபட்சம் பத்துப் பேராகினும் கையொப்பமிட்டுள்ளதாயமைதல் வேண்டும் ; அத்துடன் பதிவு செய்து கொள்ள விண்ணப்பித்தல்.

(ஆ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று உறுப்பினராயமையும் சங்கமொன்றின் பேரில் அவ்வாறான பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் முறைப்படி தத்துவம் பெற்ற ஒவ்வொரு நபரும், சங்கத்தின் எல்லா உறுப்பினரும், பதிவு செய்யப்பட்ட சங்கமல்லாதவிடத்து, எவரேனும் பத்து அங்கத்தவர்களும் உறுப்பினரின் முழு எண்ணிக்கை பத்துக்குக் குறைவாக இருக்குமிடத்து அதன் சகல உறுப்பினர்களும் கையொப்பமிடல் வேண்டும்.

(3) சங்கத்தின் உத்தேச யாப்புவிதிகள் அடங்கிய இரண்டு பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இத்துடன் அவ்விண்ணப்பமாவது எவ்வாள் ஒருவரால், அல்லது எவ்வாட்கள் சார்பாக சமர்ப்பிக்கப்படுகின்றதோ, அவ்வாட்களால், பதிவாளர் கோரும் வேறு விபரங்கள் எதுவுமிருப்பின் அவையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பதிவு செய்தல்.

6. சங்கமொன்று இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயல்பட்டுள்ளது எனவும், அச்சங்கம் ஈடுபடவுள்ள நடவடிக்கைகள் பொருளாதார ரீதியில் சரியானது எனவும் அதன் உத்தேச யாப்பு விதிகள் இந்நியதிச் சட்டத்திற்கு அல்லது அதன் உபவிதிகளுக்கு முரண்பாடற்றது எனப் பதிவாளர் திருப்திப்படுமிடத்து, தான் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்வது சரியெனக் கருதுமிடத்து அவ்வாறான சங்கத்தினையும் அதன் யாப்பு விதிகளையும் பதிவு செய்துகொள்ளலாம். பதிவு நிராகரிக்கப்படும் சங்கமொன்று அம்முடிவுக்கெதிராக, அதற்கென ஆக்கப்பட்டுள்ள உபவிதிகளின் எற்பாடுகளுக்கமைவாக, மேன்முறையீடொன்றினை மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சருக்குச் செய்வதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

பதிவுச் சாட்சி.

7. பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ், அப்பதிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என நிரூபிக்கப்படாதவிடத்து அச்சங்கம் முறைப்படி பதிவு செய்யப்பட்டதொன்று என்பதற்கான போதுமான சாட்சியாயமைதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் யாப்பு விதிகளின் திருத்தம்.

8. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று, இந்நியதிச்சட்டத்தினதும் அதன் கீழ் ஆக்கப்பட்டதான உபவிதிகளுக்கும் அமைவாக, அதன் பெயர் உட்பட அதன் எந்தவொரு யாப்பு விதியையும் திருத்தியமைக்கலாம்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் யாப்பு விதிகளுக்குக் கொண்டு வரப்படுவதான திருத்தங்கள் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பதிவு செய்யப்படும்வரை நடைமுறைக்கு வரமாட்டா. அவ்வாறான திருத்தங்கள் பதிவுக்காக இரண்டு பிரதிகளில் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) சங்கத்தின் யாப்பு விதிகளுக்குக் கொண்டு வரப்படும் திருத்தமொன்று இந்நியதிச் சட்டத்திற்கு அல்லது அதன் உபவிதிகளுக்கு முரண்பாடற்றது எனப் பதிவாளர் கருதுமிடத்து, தான் அவ்வாறு நடவடிக்கை எடுப்பது சரியானதெனக்கருதும்வாறாக அத்திருத்தத்தினைப் பதிவு செய்யலாம். திருத்தமொன்றின் பதிவு நிராகரிக்கப்படுமிடத்து அதற்கெதிரான மேன்முறையீடொன்றினை, அதற்கென ஆக்கப்பட்டுள்ள உபவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, மத்திய மாகாண, மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சருக்குச் சமர்ப்பிக்கக் கூடியதாதல் வேண்டும்.

(4) சங்கமொன்று தனது பெயரினை மாற்றுவதற்காகக் கொண்டுவரும் திருத்தமானது அச்சங்கத்தின், அதன் உறுப்பினர்களின் அல்லது அதன் முன்னாள் உறுப்பினர்களின் உரிமைகள், கடப்பாடுகள் என்பவற்றிற்குப் பாதிப்பேற்படுத்துவதாயமைதல் ஆகா. அத்துடன் அச்சங்கத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் எதனையும் அத்திருத்தம் பாதிக்கமாட்டாது.

(5) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் யாப்பு விதிகளுக்கான திருத்தமொன்று பதிவாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பதிவு செய்யப்படுமிடத்து அத்திருத்தத்தின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்று பதிவாளரால் சங்கத்துக்கு வழங்கப்படல் வேண்டும். குறித்த திருத்தம் முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு அவ்வாறான உறுதிப்படுத்தப்பட்ட பிரதி உரிய சான்றாயமைதல் வேண்டும்.

(6) இப்பிரிவில் "திருத்தம்" எனப்படுவது புதியதொரு யாப்பு விதியினை ஆக்கல், திருத்தியமைத்தல், பிரதியீடு செய்தல் என்பவற்றை உள்ளடக்கும்.

பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சொத்துக்கள், பொறுப்புக்களை ஒருங்கிணைத்தல், பிரித்தல், கையளித்தல்.

9. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றானது, பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட முன் அனுமதியுடனும், அதன் பொதுக் கூட்டத்திற்கு சமுகம் தந்துள்ள உறுப்பினர்களின் அல்லது அதன் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டிற்கும் கூடியதான வாக்குகளினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையொன்றுடனும்—

(அ) சங்கத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவற்றை முற்றாகவோ அல்லது அவற்றுள் ஒரு பகுதியையோ பிறிதொரு சங்கத்திற்குக் கையளித்தல் ; அல்லது

(ஆ) சங்கமானது இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான சங்கங்களாகப் பிரிவடைந்து கொள்ளல் என்பவற்றை செயற்படுத்தலாம்.

(2) பதிவு செய்யப்பட்ட இரண்டு சங்கங்கள், பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட முன் அனுமதியுடனும், இரு சங்கங்களினதும் பொதுக் கூட்டத்தில் சமுகமளித்த உறுப்பினர்களின் அல்லது அவற்றின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டிற்கும் கூடியதான வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதான பிரேரணை களினாலும், ஒன்றிணைந்து, புதியதொரு சங்கமாகத் தாபிதம் செய்து கொள்ளலாம்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் இதன் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் நிறை வேற்றப்படுவதான பிரேரணைகளில் ஏற்புடையதான, கையளித்தல், பிரிதல், ஒன்றிணைதல் என்பன பற்றிய பூரண விளக்கம் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் அவ்வாறான பிரேரணையொன்று நிறைவேற்றப்படுமிடத்து, சங்கத்தால் அது தொடர்பாக அதன் சகல உறுப்பினருக்கும் கடன் வைப்பாளர்களுக்கும் எழுத்துமூலம் அறிவித்தல்

கொடுத்தல் வேண்டும். முரண்பட்ட, யாப்புவிதிகள் அல்லது ஒப்பந்தங்கள் இருப்பினும் அவை கருத்திற் கொள்ளப்படாது. அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒருமாத கால எல்லைக்குள் உறுப்பினர்கள் தங்களின் வைப்புக்கள், அங்கத்துவப் பணம், கடன் என்பவற்றை மீளப் பெற்றுக் கொள்ளவோ அல்லது தீர்த்துக் கொள்ளவோ உறுப்பினர்கள் அல்லது வைப்பாளர்கள் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) 4 ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டதான கால எல்லைக்குள் தமது அதிகாரங்களை செயற்படுத்தத் தவறிய உறுப்பினர் கடனாளி நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அதன் முழு அம்சங்களுடன் ஏற்றுக் கொண்டுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும்.

(6) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையொன்று அதன் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவற்றைக் கையளித்தல் தொடர்பானதொன்றெனில், அப்பிரேரணை நடைமுறைச் சட்ட விதிகளுக்கு முரணானதாயிருப்பினும், நிறைவேற்றப்பட்ட பிரேரணையை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அவசியமின்றி அவ்வாறான கையளிப்பை மேற்கொள்ளச் சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

*சில சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பதிவுச் சான்றிதழ் இரத்தாதல்.*

10. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன இதன் 9 ஆம் பிரிவின் கீழ் பூரணமாகக் கையளிக்கப்படுமிடத்து அவ்வாறு கையளிக்கும் சங்கத்தின் பதிவு ரத்துச் செய்யப்பட்டு, அச்சங்கம் கலைக்கப்பட்டதொன்றெனக்கருதப்படல் வேண்டும். மேலும் அச்சங்கம் தொடர்ந்தும் ஒரு தாபனம் என்ற ரீதியில் இயங்கும் தன்மையை இழத்தல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட இரண்டு அல்லது அதிகமான சங்கங்கள் இதன் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஒன்றிணையுமிடத்து, அவ்வாறு ஒன்றிணைந்த புதிய சங்கம் பதிவு செய்யப்படும் திகதியிலிருந்து, முன் இருசங்கங்களின் பதிவுகளும் ரத்துச் செய்யப்பட்டு அவை கலைக்கப்பட்டதாய் கருதப்படல் வேண்டும். அத்துடன் அவை தாபனங்கள் என்ற ரீதியில் இயங்கும் தன்மையையும் இழத்தல் வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று இதன் 9 ஆம் பிரிவின் கீழ் இரண்டு அல்லது அதனினும் மேற்பட்ட எண்ணிக்கையான சங்கங்களாகப் பிரிவுபடுமிடத்து, அவ்வாறு பிரிவுபட்ட சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து மூலச் சங்கமானது ரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமெனபதுடன் அதன் பதிவு ரத்துச் செய்யப்படல் வேண்டும். அத்துடன் அச்சங்கம் தாபனமொன்றென்ற ரீதியிலான தனது இயக்கத்தையும் இழந்துவிடல் வேண்டும்.

## II ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் அவர்களின் உரிமைகளும் கடப்பாடுகளும்

*கொடுப்பனவொன்றைச் செலுத்தும் வரை உறுப்பினர்கள் உரிமைகளை பிரயோகிக்காமை.*

11. (1) உறுப்பினர் ஒருவர் சார்பில், உபவிதிகள் மூலம் அல்லது சங்கத்தின் யாப்பு விதிகள் மூலம் வரையறுக்கப்பட்டதான கொடுப்பனவொன்றைச், செலுத்தவியலாத அல்லது அவ்வாறான கொடுப்பனவைச் செலுத்தும்வரை அல்லது அச்சங்கத்தால் வரையறுக்கப்பட்ட தொடர்பொன்றினை மேற்கொள்ளாதவிடத்து அல்லது மேற்கொள்ளும் வரை பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினருக்கான உரிமை எதனையும் எவரும் பிரயோகித்தல் கூடாததாதல் வேண்டும்.

(2) இதன் (1) ஆம் உட்பிரிவிற் காட்டியதான அறவீடொன்றினை அல்லது அவ்வுட்பிரிவில் கூறப்பட்டதான தொடர்பொன்றினை உறுப்பினரொருவரும் மேற் கொள்ளாதவிடத்து (1) ஆம் உட்பிரிவிற்காட்டப்பட்டதான அவ்வாறான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்காக 1961 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விவசாய உற்பத்திகள் (உத்தரவாதவிலை, நெல்சாகுபடியும் குத்துதலும்) சட்டத்தின் உப விதிகளுக்கமைய கொள்வனவு செய்யப்பட்ட வகையில் உறுப்பினருக்குச் சேர வேண்டியதான கொடுப்பனவொன்றிலிருந்து அறவீடு செய்து கொள்ளல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

*இணை உறுப்பினர்.*

12. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று எந்த ஆளொருவரையும் தனது இணை உறுப்பினராக அனுமதிக்கலாம்.

(2) அவ்வாறான இணை உறுப்பினரொருவர், சங்கத்தின் சொத்துக்கள் அல்லது அதன் இலாபம் என்பனவற்றில் பங்கு கோரவோ அல்லது சங்கக் கூட்ட நடவடிக்கைகளின்போது வாக்களிக்கவோ அதிகாரம் அற்றவராதல் வேண்டும்.

*இளம் வயதினரான உறுப்பினர்கள் சங்கத்துடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம்.*

13. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினரென முறைப்படி அனுமதிக்கப்பட்ட ஆளொருவர், இளவயதினர், அல்லது குறித்தவருடத்தினால் அல்லது இதன் உப விதிகளினால் குறித்தவாறான சங்கத்துடனான ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்வது தடையாயமைதல் கூடாததாதல் வேண்டும். அத்துடன் சங்கத்துடன் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தம் ஒன்று ரத்துச் செய்யப்படுவதற்கோ உதாசீனம் செய்யப்படும் ஒப்பந்தம் ஒன்று ரத்துச்செய்யப்படுவதற்கோ உதாசீனம் செய்யப்படுவதற்கோ வயதெல்லை ஒரு காரணமாதல் கூடாது. அத்துடன் சங்கமொன்றுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தமொன்றின் ஒரு பகுதியாளராகவோ, பிணையாளராகவோ

இளவயதுடையவரொருவர் இருக்குமிடத்து, அவரது வயது அவருக்கெதிராக சட்ட நடவடிக்கையொன்றினைத் தொடருவதற்கு தடையாக அமையாதிருத்தல் வேண்டும்.

சங்கங்களின் அலுவலர்களால் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள்.

14. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அலுவலரொருவர் நியமனத்திற்கான குறித்த தகைமைகளைக் கொண்டிராதவர் எனவோ அல்லது அவ்வலுவலரது நியமனம் ஒழுங்கீனமானது எனவோ பின்னொருபோதும் சங்கத்தின் சார்பாக ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமெதுவும் செல்லுபடியாகாமைக்கு அது ஒரு காரணமாயமைதல் கூடாது.

அங்கத்தவர்களின் வாக்குகள்.

15. ஆதார சங்கமொன்றின் அங்கத்தவரொருவருக்கு சங்க நடவடிக்கையின்போது தனியொரு வாக்குரிமைமட்டுமிருத்தல் வேண்டும்.

எனினும் குறித்த விடயம் ஒன்றின்பால் சமமான வாக்குகள் வழங்கப்படுமிடத்து தவிசாளரால் தீர்மானவாக்கொன்றினை பிரயோகிக்கப்படலாம்.

வாக்கு பிரயோக முறை.

16. (1) ஆதார சங்கமொன்றின் உறுப்பினர் ஒருவர் சங்கக் கூட்டமொன்றில் நேரடியாகவல்லாது தனது வாக்கினைப்பிரயோகித்தல் கூடாது.

எனினும் சங்க யாப்புவிதியொன்றின் மூலம் உறுப்பினரொருவர் தனது வாக்கினைப் பிரதிநிதியொருவர் மூலமாகப் பிரயோகித்தல் வகுக்கப்பட்டுள்ளதானவிடத்து மாத்திரம் உறுப்பினரொருவர் தனது வாக்கினை பிரதிநிதியொருவர் மூலம் பிரயோகிக்கலாம்.

16. (2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று பதிவு செய்யப்பட்ட பிறிதொரு சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருப்பின் அவ்வாறு அங்கத்துவம் பெற்றுள்ள சங்கத்தின் கூட்டமொன்றில் வாக்களிப்பதற்காக நபரொருவரையோ, அல்லது அதற்கு மேற்பட்டோரை நியமிக்கலாம்.

வாக்குகளை தொடர்புகளை ஒப்படைத்தலுக்கான வரையறைகள்.

17. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அங்கத்தவரொருவர் முன்னாள் அங்கத்தவரொருவர் அல்லது மரணித்த உறுப்பினரொருவர் தன்பால் உள்ள பங்குகள் அல்லது சங்கத்தின் வேறு தொடர்புகளைப் பிறிதொருவருக்கு மாற்றம் செய்யுமிடத்து இந்நியதிச் சட்டத்தின் அல்லது அதன் உபவிதிகளின் பால் குறிப்பிடப்படுவதான உயர் எல்லைக்கட்டுப்பாடுகளுக்கமைவாக அவ்வாறான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

(2) மட்டுப்படுத்தப்படாத பொறுப்புக்களையுடையதான சங்கமொன்றின் அங்கத்தவரொருவர்—

(அ) ஒரு வருட காலத்துக்குக் குறையாத காலத்திற்குத் தனது பங்கினை அல்லது சங்கத்துடனான வேறு தொடர்புகளைக் கொண்டிராதவிடத்து ; அல்லது

(ஆ) சங்கத்தின்பால், உறுப்பினரொருவர்பால் அல்லது உறுப்பினராவதற்கான ஆளொருவரின் விண்ணப்பம் சங்கத்தின் செயற்குழுவின் பரிசீலனைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டதான அவ்வாறானவரின்பால் அன்றி தனது பங்கினை அல்லது சங்கத்தின் தொடர்பொன்றினைக் கையளித்தல் இயலாததாதல் வேண்டும்.

## III ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் கடமைகள்

சங்கத்தின் முகவரி.

18. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று, இதன் உப விதிகளுக்கமைவாகப் பதிவு செய்யப்பட்ட கடிதங்கள் வேறு அறிவித்தல் என்பவற்றைப் பெறக்கூடியதான தபால் முகவரியொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். அம்முகவரியில் மாற்றங்கள் ஏற்படுமிடத்து, அவ்வாறான மாற்றம் ஏற்பட்ட ஏழுதினங்களுக்குள் அது பற்றிப் பதிவாளருக்கு அறியத்தரல் வேண்டும்.

நியதிச்சட்டம் யாப்பு விதிகள் ஆகிய வற்றின் பிரதியை பார்வையிட பகிரங்க மாக வைத்தல்.

19. (1) பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் இந்நியதிச்சட்டம் இதன்கீழ் ஆக்கப்படுவதான உபவிதிகள், சங்கத்தினது யாப்பு விதிகள் என்பவற்றின் ஒவ்வொரு பிரதியையும் சங்க அங்கத்தவர் பட்டியல் பிரதியொன்றினையும் எல்லா சாதாரண கடமை நேரங்களிலும், கட்டணமெதுவுமின்றி எவரும் பார்வையிடுவதற்காக சங்கத்தின் முகவரி அமைந்துள்ள இடத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

(2) அந்தப் பட்டியலில் பின்வரும் தகவல்கள் அடங்குதல் வேண்டும் :-

(அ) ஒவ்வொரு அங்கத்தவரினதும் பெற்ற முகவரி தொழில் ;
(ஆ) அங்கத்தவராக பதிவு செய்யப்பட்ட திகதி ;
(இ) அங்கத்துவம் இரத்துச் செய்யப்பட்ட திகதி ;
(ஈ) அங்கத்துவம் இரத்தானதற்கான காரணிகள்.

## IV ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சிறப்புரிமைகள்

20. சங்கமொன்று பதிவுசெய்து கொண்டதன் பேரில் அவ்வாறு பதிவு செய்து கொண்டதான தாபனப் பெயரின் கீழ் தொடர்புறாத பாரம்பரியத்தையும், பொது முத்திரையொன்றினையும் கொண்டதாய, சொத்துக்களை உரித்தாக்கிக் கொள்வதற்கும், ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கும், நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரவும் வழக்குகளில் தன்சார்பின் விளக்கங்கள் சமர்ப்பிக்கவும், சங்கத்தின் அமைப்புக்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தத்துவம் கொண்டதான தாபனமாயமைதல் வேண்டும்.

சங்கமொன்று தாபனமாக அமைகின்றமை.

21. (1) விவசாயம், மிருகவளர்ப்பு அல்லது கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதைத் தனது நோக்கமாகக் கொண்ட சங்கமொன்றானது—

(அ) அவ்வாறான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனது உறுப்பினர்கள் அவ்வாறான உற்பத்திகளைப் பூரணமாகவோ அல்லது அவ்வுற்பத்தியின் குறித்தவொரு விகிதத்தினையோ, சங்கத்திற்கு அல்லது சங்கத்தின் மூலம் விற்பனை செய்வதை ; அல்லது

(ஆ) சங்கத்தின் யாப்பு விதிகளை அல்லது ஒப்பந்தமொன்றினை மீறியமைக்கப்பட்ட அல்லது தீர்ப்பளிக்கப்பட்ட உறுப்பினரால், சங்க யாப்புவிதிகள் அல்லது இதன் உபவிதிகள் மூலம் நிர்ணயிக்கக்கூடியதான தொகையொன்று " நிர்ணயிக்கப்பட்ட நட்டசடு " எனும் வகையில் சங்கத்திற்குச் செலுத்தப்படல் வேண்டுமென்பதை சங்கத்தின் யாப்பு விதிகளில் ஒன்றாக ஏற்பாடு செய்துகொள்ளலாம் அல்லது உறுப்பினருடனான ஒப்பந்தம் மூலம் உள்ளடக்கிக்கொள்ளலாம்.

சங்கத்திற்கோ சங்கத்தின் மூலமாகவோ பொருள்களை விற்றல்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் இதன் (1) ஆம் உட்பிரிவிற் காட்டியவாறான ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் அவ்வாறான உற்பத்தி அல்லது உற்பத்தி முடிவினை அண்மித்துள்ளவற்றின் பேரில் சங்கத்தின் நன்மைக்காக முதன்மை உரிமை பெறல் வேண்டும்.

(3) இதன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் பேரிலான நீதி விசாரணை யொன்றில், அவ்வொப்பந்தம் வர்த்தகத்தடை ஒப்பந்தமொன்றென்ற காரணம் ஏற்கக்கூடிய காரண மொன்றாயமையாதிருத்தல் வேண்டும்.

(4) பதிவு செய்யப்பட்ட சங்க உறுப்பினரொருவர் தான் அச்சங்கத்தின் உறுப்பினராவதற்கு முன்னர் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தமொன்றின் பேரில் தனது உற்பத்தியை வேறு ஆளொருவருக்கு விற்பனை செய்யுமிடத்து அவர் தனது உற்பத்திகளை சங்கத்திற்கே விற்பனை செய்ய வேண்டுமெனப் பணிக்கும் சங்க யாப்பு விதிகளை மீறியவராகக் கருதப்படலாகாது.

(5) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினராவதற்காக விண்ணப்பிக்கும் எவரையும் அவர் தனது உற்பத்திகளை வேறு நபரெவருக்கும் விற்பனை செய்வதற்காக ஒப்பந்தமெதனையும் ஏற்படுத்தியிருப்பாரெனின் அது பற்றிய விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு சங்கம் கோருமிடத்து, அவ்வாறான விபரங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

22. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் சகல உறுப்பினர்களும் அல்லது அவர்களுட்சிலர், மத்திய மாகாணத்தின், அல்லது அதன் மாவட்டமொன்றில் அல்லது அதன் ஒரு பகுதியில் குறிப்பிட்ட ஒரு பொருளின் உற்பத்தியாளர் என அமைச்சர் திருப்தியுறும் பட்சத்தில், அமைச்சரானவர் தற்றுணிபின் பேரில் மத்திய மாகாணத்தில் அல்லது அதன் மாவட்டமொன்றில் அல்லது அதன் ஒரு பகுதியில் அவ்வாறான உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவரை அவர் அவ்வாறான சங்கமொன்றின் உறுப்பினராயினும், அல்லாத விடத்து, தனது உற்பத்தியில் சொந்தத் தேவைக்கு மிகுதியாயுள்ள பகுதியை சங்கத்திற்கு அல்லது சங்கத்தின் மூலம் விற்பனை செய்யும் படி பணிக்கலாம்.

சில சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் மூலமாக உற்பத்திப் பொருள்களை கட்டாயமாக விற்பனை செய்தல்.

(2) அமைச்சர் இதன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்புரையொன்று வழங்குமிடத்து அப்பணிப்புரை, வர்த்தமானிப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்படல் வேண்டும். அப்பணிப்புரையில் குறித்த பொருள் பற்றிய விபரம் பணிப்புரை நடைமுறைப்படுத்தப்படும் எல்லைகள், அப்பொருட்களுக்காக உற்பத்தியாளருக்கு வழங்கப்படுவதான விலைகள் என்பன அடங்குதல் வேண்டும்.

(3) எல்லாப் பணிப்புரைகளும் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரமாகும் தேதியினின்றும் நடைமுறைக்கு வருவதுடன் இதன் (5) ஆம் உட்பிரிவிற் காட்டியவாறான அப்பணிப்புரை ரத்து செய்யப்படும் வரை தொடர்ந்து நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

(4) எல்லாப் பணிப்புரைகளும் அவை பிரசுரிக்கப்பட்ட உடனடுத்துப் பின்னர் மத்திய மாகாண சபையின் முன் அதன் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(5) எல்லாப் பணிப்புரைகளும் ரத்து செய்யப்பட்டதாய்க் கருதப்படல் வேண்டும். எனினும் அவ்வாறு ரத்து செய்யப்படுவதற்கு, முன்னர் அப்பணிப்புரையின் பேரில் மேற் கொள்ளப்பட்ட அல்லது மேற் கொள்ளபட்டதாகக் கருதப்படும் நடவடிக்கையெதனையும் அது பாதிக்கப்படாது அமைதல் வேண்டும். ரத்து செய்யப்பட்ட பணிப்புரையானது மாகாண சபையினால் அனுமதி மறுக்கப்பட்ட தேதியுடன் ரத்து செய்யப் பட்டதாதல் வேண்டும். அத்துடன் ரத்து செய்யப்பட்டதான தேதி வர்த்தமானிப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

(6) (அ) அமைச்சர் இதன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தன்னால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு மாற்றங்கள் கொண்டுவரும் நோக்கில் காலத்துக்குக் காலம் மாற்றுப் பணிப்புரைகளை (இவை திருத்தப்பணிப்புரைகள் என வழங்கலாம்) வர்த்தமானி பத்திரிகை மூலம் பிரசுரிப்பதன் மூலம் வழங்கலாம். அவ்வாறான பணிப்புரைகள் அவை பிரசுரமாகும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(ஆ) திருத்தப்பட்ட பணிப்புரை வழங்கப்பட்டதான இதன் (1) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்புரையொன்று, அது திருத்தப்படுமுன்னர் குறிப்பிட்டதான காலவெல்லைக்கு மட்டுமே நடைமுறையில் இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பணிப்புரை குறிப்பிட்ட காலத்துடன் நடைமுறையினின்றும் அகலுதல் வேண்டும்.

(இ) எல்லாத் திருத்தப்பணிப்புரைகளும் மத்திய மாகாண மாகாண சபையின் முன் அதன் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எனினும் இதன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதான பணிப்புரை இதன் (4) ஆம் உட்பிரிவின்படி மாகாண சபையின் அனுமதியினைப் பெறுமுன்னர், அப்பணிப்புரைக்கு ஒன்றோ அல்லது அதற்கும் கூடுதலானதோ திருத்தப் பணிப்புரைகள் வழங்கப்பட்டதான சந்தர்ப்பத்தில், அவ்வாறான சகல திருத்தங்களையும் உள்ளடக்கியதான அப்பணிப்புரைக்கு ஒன்றோ அல்லது அதற்கும் கூடுதலானதோ திருத்தப் பணிப்புரைகள் வழங்கப்பட்டதான சந்தர்ப்பத்தில், அவ்வாறான சகல திருத்தங்களையும் உள்ளடக்கியதாக அப்பணிப்புரை மாகாண சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் அவ்வாறான திருத்தப் பிரேரணைகள் வெவ்வேறாக மாகாண சபைக்குச் சமர்ப்பித்தல் அவசியமற்றதாதல் வேண்டும்.

(ஈ) ஏதேனுமொரு திருத்தப் பணிப்புரை மத்திய மாகாண மாகாண சபையின் அனுமதியைப் பெறாதவிடத்து இத்திருத்தப் பணிப்புரை ரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். எனினும், இதன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டதான பணிப்புரை, திருத்தமின்றி நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

(உ) அமைச்சர் இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கியதான பணிப்புரைகள் எதனையும் எச்சந்தர்ப்பத்திலும் ரத்து செய்யலாம். பணிப்புரையொன்று அமைச்சரால் ரத்துச் செய்யுமிடத்து அது பற்றி வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படல் வேண்டும். அவ்வாறான பிரசுரிக்கப்பட்ட திகதியுடன் அப்பணிப்புரை ரத்து செய்யப்பட்டதாய் அமைதல் வேண்டும்.

(7) மத்திய மாகாண மாகாண சபையின் அனுமதியுடன் வழங்கப்பட்டதான பணிப்புரையொன்று இந்நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட பணிப்புரையொன்றிற்கொப்பான வலுவினையும் தத்துவத்தினையும் கொண்டதாதல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் பிரசுரிக்கப்படுவதான எல்லா வர்த்தமானிப் பத்திரிகைப் பிரசுரங்களும் அமைச்சரின் கையொப்பத்தின்கீழ் பிரசுரமாதல் வேண்டும்.

(9) இப்பிரிவின் வழங்கப்படுவதான பணிப்புரைகள் அல்லது இதன் ஏற்பாடுகள், வழக்கிலுள்ள வேறு சட்டங்கள் எதற்கும் முரண்பாடானதாய் அல்லது எதிரானதாகவே இருக்குமிடத்து இப்பிரிவின் கீழான பணிப்புரைகள் அவை நடைமுறையிலுள்ள காலம்வரை மற்றெல்லா சட்டங்களையும் விட தத்துவமுடையதாதல் வேண்டும்.

(10) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினரல்லாத ஆளொருவர் இதன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டதான பணிப்புரையொன்றின்பேரில் தனது உற்பத்திகளை அச்சங்கத்திற்கு அல்லது அச்சங்கத்தின்மூலம் விற்பனை செய்ததால், அல்லது அவ்வாறான விற்பனை சம்பந்தமாக எழும் விடயங்கள், கொடுக்கல் வாங்கல்கள், என்பவற்றின்போது தான் அச்சங்கத்தின் உறுப்பினராயிருப்பின் பின்பற்ற வேண்டியதான ஒழுங்குமுறைகள், விதிகள், கடப்பாடுகள் அனைத்தையும் கொண்டவராதல் வேண்டும்.

(11) இதன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்புரை வழங்கப்பட்டதான உற்பத்தியாளரொருவர் தான் அப்பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் உறுப்பினரல்லாதவிடத்து, ஆனால் உறுப்பினராதற் பொருட்டு விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பிப்பாரெனில் சங்கமானது —

(அ) அவ்வுற்பத்தியாளர் விரும்புமிடத்து, சங்கத்திடம் உள்ள அவரது வைப்புக்களினின்றும், அல்லது சங்கத்திடமிருந்து அவருக்கு சேரவேண்டியதான கொடுப்பனவு ஒன்றிலிருந்து, உறுப்பினர் கட்டணத்தை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ அறவிட்டுக் கொள்ள அப்பதிவு செய்யப்பட்ட சங்கம் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(ஆ) மேற்காட்டியவாறான அறவீடு மூலம் உறுப்பினர் கட்டணம் முழுமையாகப் பெறப்பட்டதன் பேரில் அவ்வுற்பத்தியாளர் அச்சங்கத்தின் உறுப்பினராகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.

ஒப்பந்தங்களுக்கு மாறாக செயற்படுவதற்கு மற்றவர்களிடம் ஆதரவு தேடும் ஆள்.

23 (1) குறித்தவொரு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்குத் தனது உற்பத்திகளை இதன் 21 ஆம் பிரிவின்கீழ் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமொன்றின் மூலம் விற்பனை செய்ய ஒப்பந்தமாகியுள்ள உற்பத்தியாளர் ஒருவர் அல்லது இதன் 22 ஆம் பிரிவின்கீழ் அவ்வாறு பணிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாளரை, வேறு ஆளொருவர், அவ்வாறான பணிப்புரை அல்லது ஒப்பந்தமொன்றிற்கு மாறாக செயற்படும்படி எதிர்பார்த்தல் அல்லது விரும்ப வைத்தல் சட்டரீதியாகக் குற்றமான செயலொன்றாகும். நீதிவான் நீதிமன்றமொன்றில் நடைபெற்றதான சுருக்க விசாரணையொன்றின் பின்னர் மேற்கூறப்பட்டதான குற்றமொன்று நிரூபிக்கப்படுமிடத்து குற்றவாளியானவர் ஆயிரம் ரூபாய்க்குக் கூடாத தண்டமொன்றிற்கு உள்ளாதல் வேண்டும்.

(2) இதன் (1) ஆம் உட்பிரிவிற்காட்டியவாறான குற்றமொன்று தாபனமொன்றினைச் சார்ந்தவொருவரால் இழைக்கப்பட்டதெனின் குற்றமிழைத்த காலப்பகுதியில் அத்தாபனத்தினை சார்ந்த சகல பணிப்பாளர்களும், தான் அக்குற்றம் புரிவதைத் தடுக்கத் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டாரெனவும் நிரூபிக்காவிடத்து இக்குற்றத்திற்கான குற்றவாளிகளெனக் கருதப்படல் வேண்டும்.

எவரேனுமொரு அங்கத்தவருக்கு சொந்தமான விவசாய உற்பத்தி பொருட்கள், கால் நடைகள், உபகரணங்கள் மூலப்பொருட்கள், உற்பத்தி பண்டங்கள் ஆகியன சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட சங்க மொன்றின் உரிமை.

24. கடனொன்றினை அறவிடுவதற்காக அரசாங்கத்தின்பாலுள்ள முதன்மை அறவீட்டுரிமைக்கும், கூலி அல்லது கூலியாக அறவிட வேண்டிய தொகையொன்றிற்காக நிலஉரிமையாளர்பாலுள்ள உரிமை, அல்லது பாத்தியதைகளுக்கு அசையாச் சொத்துக்களைப் பொறுத்த மட்டில் அதன்பால் முன்னரே ஏற்படுத்திக் கொண்டுள்ள பாத்தியதை என்பவற்றிற்குட்பட்டதாய்,

(அ) பதிவு செய்யப்பட்ட சங்க உறுப்பினரொருவரால் அல்லது முன்னாள் உறுப்பினரால் அச்சங்கத் திடமிருந்து பெற்றக்கடனொன்றிற்காக செலுத்தப்பட வேண்டியதொகை அல்லது பூரணப் படுத்தப்படாத வேறு கேள்விகள் என்பன,

(i) அவ்வுறுப்பினர் அல்லது முன்னாள் உறுப்பினரிடமிருந்து சங்கத்திற்கு வரவேண்டிய தொகை, அவரால் செய்யப்பட்டதான விவசாயம் அல்லது பெறப்பட்ட விவசாயப் பொருட்களினின்றும் பூரணமாகவோ அல்லது வரவேண்டிய தொகையின் ஒருபகுதிக்காகவோ முதன்மை செலுத்தல் கடப்பாடுடையதாதல் வேண்டும்.

(ii) சங்க உறுப்பினர் ஒருவர் அல்லது முன்னாள் உறுப்பினரொருவரால் சங்க மொன்றிடமிருந்து பெறப்பட்ட கடனுக்காக செலுத்தப்பட வேண்டிய கடனிறுப்புத் தொகையின் பூரணமான அல்லது அதன் ஒருபகுதிக்காக, அவ்வுறுப்பினருக்கு வழங்கப் பட்ட கடன், அல்லது கால்நடை உணவுப்பொருட்கள், விவசாய, கைத்தொழில் உபகரணங்கள், மூலப்பொருட்கள் தொழிற்சாலை, பண்டகசாலை, விற்பனை நிலையம் என்பவற்றினின்றும் முதன்மை அறவீட்டுக்குரிமை அமைத்தல் வேண்டும்.

எனினும் இதிற் குறிப்பிட்டதான,

எனினும் இதிற் குறிப்பிட்டதான, விவசாயம், விவசாயப் பொருட்கள், கால்நடை, கால்நடை உணவு, விவசாய, கைத்தொழில் உபகரணங்கள், அல்லது மூலப்பொருட்கள் என்பவற்றை முன் அறிவித்தலின்றி சட்டரீதியாக கொள்வனவு செய்த வேறு ஆளொருவரின் அல்லது அவற்றால் உரிமைபெற்ற ஆளொருவரின் உரிமையை அது பாதித்தல் கூடாததாதல் வேண்டும்.

(iii) 1961 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விவசாய உற்பத்திகள் (உத்தரவாதவிலை, நெல்சாகுபடியும் குத்தலும்) சட்டத்தின்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட விவசாய உற்பத்திப் பொருள் கொள்வனவினின்றும், சங்கத்திற்கு வரவேண்டிய கடன்தொகையின் முதன்மை அறவீட்டுரிமை அமைதல் வேண்டும்.

(ஆ) வீட்டுவாடகை, பங்கு, கடன்தொகை, அல்லது வீடொன்றை வாங்குவதற்காக வீடமைப்புச் சங்க மொன்றிடமிருந்து அதன் உறுப்பினர், அல்லது முன்னாள் உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டிய, கடன், பூரணப்படுத்தாத கோரிக்கை, செலுத்தப்படாத கட்டணம் ஒன்றின்பேரில், அச்சங்கத்தின் சொத்துக்களில் அவ்வாறான உறுப்பினருக்குள்ள உரிமையினின்றும் முதன்மை அறவீட்டுரிமை அமைதல் வேண்டும்.

அங்கத்தவர்களின் பங்குகள், தொடர்புகள் சம்பந்தமான அறவிடல்கள்.

25. உறுப்பினர் ஒருவர், முன்னாள் உறுப்பினர் ஒருவர் அல்லது மரணித்த உறுப்பினரொருவரிடமிருந்து,

(அ) குறித்த சங்கத்திற்குச் சேரவேண்டிய கடன்தொகை.
(ஆ) வேறுபதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்குச் சேரவேண்டிய கடன்தொகை.
(இ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினை ஒடுக்குவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்குச் சேரவேண்டியதான ஏதேனும் கொடுப்பனவுகள் என்பன தொடர்பாய்,

அவ்வுறுப்பினர், முன்னாள் உறுப்பினர், அல்லது மரணித்த உறுப்பினரின், வைப்புக்கள், வேறு பணத்தொடர்புகள், முதலீடு என்பவற்றிலிருந்து அல்லது இவ்வாறான உறுப்பினர், முன்னாள் உறுப்பினர், அல்லது மரணித்த உறுப்பினரின், சொத்திலிருந்து இலாபங்களிலிருந்து அல்லது கௌரவக் கொடுப்பனவுகளிலிருந்து முதன்மை அறவீட்டுரிமை அமைதல் வேண்டும். அத்துடன் உறுப்பினர், முன்னாள் உறுப்பினர் அல்லது மரணித்த உறுப்பினருக்குச் சேரவேண்டியதான கொடுப்பனவுகளினின்றும், வேறு பதியப்பட்ட சங்கமொன்றிற்கு, அல்லது ஒடுக்குவதற்கான உத்தியோகத்தருக்குச் சேரவேண்டியதான கொடுப்பனவுகள் எதுவுமிருப்பின் அவற்றைச் செலுத்தக்கூடியதாயமைதல் வேண்டும்.

*பங்குகள், அங்கத்துவப்பணம், பொதுத்தொடர்புகள், தடைசெய்யப்படவோ விற்பனை செய்யவோ முடியாததாதல்.*

26. இதன் 25 ஆம் பிரிவிற்குற்பட்டதால், பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றின் மூலதனத்தில் அதன் ஒரு உறுப்பினருக்குள்ள பங்கு அல்லது அவரால் செலுத்தப்பட்ட பணம் என்பலவ, அவர்பெற்ற வேறு கடன்களைத் தீர்ப்பதற்காக நீதிமன்றமொன்றால் வழங்கப்படும் விற்பனை உத்தரவுகளுக்கு உட்படல் ஆகாது. அத்துடன் சங்கமொன்றின் உறுப்பினர், பொருள் நட்டவரெனத் தீர்க்கப்பட்டதன் பேரில் அவரது பெறுனர் அல்லது சிவில் நடைமுறைச் சட்டகோவையின் 1 ஆம் பிரிவிற்கமைய நியமிக்கப்படுபவரான பாதுகாவலர் ஒருவர், அவ்வுறுப்பினரின் சங்கத்துடனான தொடர்புகளுக்குப் பாத்தியதையுடையவராதல் இயலாததாகும்.

*அங்கத்தவரொருவர் மரணிக்குமிடத்து தொடர்புகளை கையளித்தல்.*

27. (1) சங்கத்தின் அங்கத்தவரொருவர் மரணிக்குமிடத்து பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றுடன் அவருக்கிருந்த தொடர்புகள் பங்குகள் என்பவற்றிற்கு, அச்சங்கத்தின் யாப்பு விதிகளுக்கமைய அவ்வுறுப்பினரால் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவர், அவ்வாறு பெயர் குறித்துரைக்கப்பட்டிராவிடத்து, மரணித்த உறுப்பினரின் பின் உரித்தாளி அல்லது அவர்களின் பிரதிநிதிகள் என செயற்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் பாத்தியதையுடையவராவர். அல்லது மரணித்த உறுப்பினரது பங்குகள் தொடர்புகள் என்பவற்றிற்குச் சமமான தொகைப்பணம், அவரால் பெயர் குறிக்கப்பட்டவர், பின்னுரிமையாளர், அவர்களது பிரதிநிதிகளுக்கு வழங்கப்படலாம் எனினும்,

(அ) மட்டுப்படுத்தப்படாத பொறுப்புக்களைக் கொண்ட சங்கமொன்றின் அங்கத்தவரது பங்குகள் அல்லது வேறு தொடர்புகள் சம்பந்தமாக, அவரது பின்னுரிமையாளர், பிரதிநிதி அல்லது அவரது பெயர்குறித்துரைக்கப்பட்டவர் அவ்வாறான பங்குகள், மற்றும் தொடர்புகள் என்பவற்றிற்குச் சமமான பெறுமதியை வழங்குமாறு கோரிக்கை விடுக்கலாம்.

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட சங்கமொன்றின் உறுப்பினர் மரணிக்குமிடத்து, அவரது பங்குகள் மற்றும் தொடர்புகள், சங்க யாப்பு விதிகள், இந்நியதிச் சட்டத்தின் உபவிதிகள் என்பவற்றிற்கமைவாக, அவ்வுறுப்பினரின் பின்னுரிமையாளர், அவரது பிரதிநிதி, அல்லது அவரால் பெயர் குறித்துரைக்கப்பட்டவர்களுக்கு, அவ்வங்கத்தவரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் மரணித்த ஆறு மாதகாலத்துக்குள் மாற்றியளிக்கலாம்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அங்கத்தவரொருவர் மரணித்தால் அவருக்குச் சேரவேண்டியதான மற்றைய கொடுப்பனவுகள் அவரால் பெயர் குறித்துரைக்கப்பட்டவர், பின்னுரிமையாளர், அல்லது சட்டபூர்வ பிரதிநிதியென்பவர்கட்கு செலுத்தப்படல் வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் இப்பிரிவின் கீழ் செலுத்தப்படுவதான, பங்குகள், சொத்துக்கள் என்பனவற்றிற்கான கொடுப்பனவுகளுக்கெதிராக வேறு நபர்களால் செய்யப்படும் முறையீடுகள் எதுவும் வழுவுடையதாதல் ஆகாததாதல் வேண்டும்.

*இளவயதினரொருவரால் அல்லது அவர் சார்பில் செய்யப் படுகின்ற வைப்புகள்.*

28. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால், இளவயதினரொருவரிடமிருந்து அல்லது அவர்களது சேமலாபத்திற்காக வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படலாம். அவ்வாறான வைப்புக்களின் பேரிலான இலாபப் பங்குகளை இளவயதினருக்குச் செலுத்துதல் சட்டபூர்வமாதல் வேண்டும். இளவயதினரொருவரால் வைப்பு செய்யப்படும் வைப்புப்பணம், அதன் இலாபத்துடன் இவ்விள வயதினருக்குத் திருப்பிச் செலுத்தலாம் அல்லது இளவயதினரொருவருக்காக வைப்புச் செய்யப்பட்ட பணம், அதன் இலாபத்துடன் அவ்வயதினர்களின் நன்மைக்காக அவரது பாதுகாவலருக்குச் செலுத்தப்படலாம்.

(2) இப்பிரிவின் கீழ் சங்கத்தால், இளவயதினரொருவருக்கு அல்லது பாதுகாவலனானவருக்கு வழங்கப்படுவதான கொடுப்பனவொன்றின் பேரில் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டொன்று, அவ்வாறான பணம் செலுத்தப்பட்டதற்கான போதுமான சாட்சியாதல் வேண்டும்.

*சங்கத்தின் கடன் சம்பந்தமாக முன்னாலுள்ள அங்கத்தவர், மரணித்த அங்கத் தவர் என்போரின் சொத்துக்களின் பாத்தியதை.*

29. (1) சங்கத்தின் முன்னாள் அங்கத்தவர் ஒருவர், அச்சங்கத்தின்பால் அவருக்குள்ள கடன் செலுத்துகை, மற்றும் கடப்பாடுகள் என்பலவ தொடர்பாக அவர் அங்கம் வகித்த கடைசி தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குத் தொடர்பாக இருந்துவரல் வேண்டும்.

(2) சங்க உறுப்பினரொருவர் மரணித்ததைத் தொடர்ந்த இரண்டு வருடங்களுக்கு அவ்வுறுப்பினர் சங்கத்துக்குச் செலுத்த வேண்டியதான கடன் சம்பந்தமாய் அவரது சொத்துக்கள், பால் பாத்தியதையுடையதாதல் வேண்டும்.

30. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று தனது உறுப்பினர் தொடர்பான பெயர் இடாப்பில் அல்லது பட்டியலில் பேணப்பட்டு விபரங்கள் பின்வரும் விடயம் தொடர்பாய் முரண்பாடின்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணமொன்றாதல் வேண்டும்.

(அ) ஆளொருவர் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள தேதி.
(ஆ) உறுப்புரிமையிலிருந்து இரத்து செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ள தேதி.

31. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாய் பேணப்பட்டதான பதிவேட்டுக் குறிப்புக்களின் பிரதிகள் இதன் உபவிதிகள் கூறும்வாறாக, உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் அக்குறிப்புக்கள் முறையாகப் பேணப்பட்டவை என சிவில் அல்லது குற்றவியல் நீதி விசாரணையொன்றின் போது ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, அக்குறிப்பில் காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல் கணக்குகள், எனும் விபரங்களும் அவ்வாறான விசாரணையின்போது சாட்சியாயமைதல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று நீதி விசாரணையொன்றின் போது அவ்விசாரணையின் ஒரு பக்கவாதியாயில்லாதவிடத்து, இதன் (1) ஆம் உட்பிரிவிட்காட்டியதான சாட்சியாயமையக் கூடியதான பதிவேட்டுப் பிரதியொன்றை சமர்ப்பிக்கும்படியோ அல்லது அப்பதிவுகளிற் குறிப்பிட்டுள்ளவற்றைக் கொண்டு சாட்சி கூறும்படியோ விஷேட சந்தர்ப்பம் ஒன்றின்மீது நீதிமன்றத்தைத் தவிர வேறு நபர்களால் அழைப்பாணை விடுக்கும் தத்துவம் இல்லாதிருத்தல் வேண்டும்.

32. நடைமுறைச்சட்ட விதிகளைக் கவனத்திற்கொள்ளாது, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று — சங்கமொன்றினால் அடகுக்காக கடன் பத்திரங்களை வைப்பிடல்.

(அ) பொதுக்கணக்கினை சமப்படுத்தும் நோக்குடன் அது தன்பாலுள்ள கடன் பத்திரங்களை அடகு வைக்கலாம்.

(ஆ) மேலும் சங்கத்தின்மீது வழங்கப்பட்டதான அறிவித்தல் கடைசித்தின்ம் வரை பணம் செலுத்தத் தவறுமிடத்து, நீதிமன்றமொன்றின் முன்செல்லாது, அக்கடன்பத்திரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் சிலவற்றையோ விற்று அதனால் பெறப்படும் வரவிலிருந்து அக்கணக்கினைத் தீர்த்துவிடும்படி கடன் வழங்குனருக்கு அனுமதி வழங்கலாம்.

33. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று அதன் குறிக்கோள் தொடர்பான நடவடிக்கைக்காக காணி, கட்டிடம் அல்லது வேறு அசையும், அசையாச் சொத்துக்களை வாங்கலாம் நன்கொடையாக அல்லது வேறுவகையாகப் பெற்றுக் கொள்ளலாம். வாடகைக்குப் பெறலாம். விற்கலாம், வாடகைக்கு விடலாம், ஒத்துமாறலாம் அல்லது வேறு வகையாகக் கையளிக்கலாம். சொத்துக்களை பொறுப்பேற்கும் விற்கும் உரிமை.

எனினும், அசையாச் சொத்துக்களின் பேரில் அல்லது இந்நியதிச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட உபவிதிகளின்கீழ் குறித்துரைக்கப்படுவதான அசையும் சொத்துக்கள் பேரிலான இதனகத்து பின்னர், குறிப்பிடுவதான ஏற்பாடுகளுக்கமைவான கொடுக்கல் வாங்கல்களின் போது பதிவாளரின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

34. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் குறிக்கோள் சம்பந்தப்பட்ட நடவடிக்கையொன்றிற்காக காணியொன்றினையோ, கட்டிடம் ஒன்றையோ கையேற்க வேண்டுமிடத்து அத்தேவை பொதுத் தேவை எனக்கருதப்பட்டு அரசாங்கத்தால் அச்சங்கத்துக்கென அக்காணி காணிக் கையேற்புச் சட்டத்தின்கீழ் கையேற்கப்படலாம். காணிகளை கட்டடங்களை கட்டாயமாக பொறுப்பேற்றல்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் தேவைக்காக அரசாங்கம் காணியொன்றினையோ அல்லது கட்டிடம் ஒன்றினையோ, காணிக் கையேற்புச் சட்டத்தின்கீழ் கையேற்க நடவடிக்கை மேற்கொள்ளுமிடத்து இச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழான ஆணை பிறப்பிக்க முன்னர் சங்கமானது அச்சட்டத்தின்கீழ் அக்காணி அல்லது கட்டிடத்திற்காக நிர்ணயிப்பதான, நட்டயீட்டினையும் அக்ல்கயேற்புக்கான செலவுத் தொகையையும் அரசாங்கத்துக்குச் செலுத்தல் வேண்டும்.

எனினும், அச்சட்டத்தின்கீழ் நட்டயீட்டுத் தொகை நிர்ணயிக்க முன்னர் அவசர தேவைக்காக அக்காணி அல்லது கட்டிடம் கையேற்கப்படுமிடத்து அக்காணி அல்லது கட்டிடத்திற்காக நிர்ணயிக்கக் கூடியது என கையேற்பு உத்தியோகத்தர் உத்தேசிக்கும் தொகை கையேற்பு ஆணை பிறப்பிக்கப்படு முன்னர் சங்கத்தால் செலுத்தப்படல் வேண்டும். பின்னர் சரியான நட்டயீடு நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய தொகையேதுமிருப்பின் சங்கமானது அதனையும் செலுத்தல் வேண்டும்.

## V ஆம் அத்தியாயம்

### யாப்பு விதிகள் தொடர்பான பொது ஏற்பாடுகள்

*சங்கத்தின் யாப்பு உபவிதிகளுக்கு அங்கத்தவர்கள் கடப்பாடு கொண்டவராதல்.*

35. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் சகல யாப்பு விதிகளும் அவைமுறைப்படி பதிவு செய்து கொள்ளப்படுவதன் பேரில் அச்சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தான் கையொப்பமிட்டு அவ்யாப்பு விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒழுகுவதற்குச்சம்மதம் தெரிவித்த அளவினதாய் சங்கமும், அதன் உறுப்பினர்களும் அவ்யாப்பு விதிகள் அனைத்துக்கும் கடப்பாடு கொண்டவராதல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் யாப்பு விதிகள் தொடர்பாய் பொருட் கோடல் விடயங்களில் ஏற்படும் சந்தேகங்களெதுவுமிருப்பின் அவற்றிற்கான தீர்வுக்காக அவை பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான விடயமொன்றின்பால் பதிவாளரின் தீர்ப்பானது சட்டபூர்வமானதும், இறுதியானது மாயமைதல் வேண்டும்.

*வர்த்தகத்தடை உபவிதிகளை ஆக்கும் அதிகாரம்.*

36. யாப்பு விதிகள் ஆக்கப்படுவதற்கான தத்துவங்கள் இந்நியதிச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ளதான விடயம் ஒன்றின் பேரில் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் ஆக்கப்படுவதான யாப்பு விதிகள், அவை வர்த்தகத்தடை ஒப்பந்தமொன்று என்ற காரணத்திற்காக மாத்திரம் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படலாகாது.

*அங்கத்தவர்களுக்கு தண்டக்கட்டணம் விதிப்பதற்கான உப விதிகளை ஆக்கும் அதிகாரம்.*

37. பதிவு செய்யப்பட்ட ,சங்கமொன்றினால் அதற்காக யாப்புவிதிகளை அமைத்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில், அவ்வாறான யாப்புவிதிகளை மீறும் உறுப்பினருக்கு விதிக்கக்கூடியதான தண்டபணத்தினை நிர்ணயிக்கக்கூடியதான யாப்பு விதிகளையும் ஆக்கிக்கொள்ளலாம்.

(அ) சங்கத்தினால் தண்டப்பணம் அறவீடு செய்யத்தீர்மானித்துள்ளது பற்றியும் எக்காரணங்கள் தொடர்பாக அவை அறவீடு செய்யப்படும் என்பது பற்றியும் எழுத்துமூலமான அறிவித்தல் கொடுக்கப்பட்டிராதவிடத்து

(ஆ) உபவிதிகளால் குறித்துரைக்கப்பட்ட காலஎல்லைக்குள், குறித்தவாறான முறையில் விதிக்கப்பட்ட தண்டனைக்கெதிராக உறுப்பினர் போதுமான காரணம் காட்டத்தவறினாலும் அன்றி

எந்த உறுப்பினரிடமிருந்தும் அவ்வாறான தண்டப் பணமொன்று அறவீடு செய்தல் ஆகாததாதல் வேண்டும்.

## VI ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் சொத்துக்களும் நிதியமும்

*பதிவுசெய்யப்பட்ட சங்கங்களினால் வழங்கப்படும் கடன்கள்.*

38. (1) பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்று அதன் உறுப்பினர் தவிர்ந்த ஏனையோருக்கு கடன் வழங்கல் கூடாததாதல் வேண்டும். எனினும் பதிவாளரின் முன் அனுமதியுடனும், அவர் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாகவும் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று, வேறு பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றிற்குக் கடன் வழங்கலாம். அத்துடன் குறித்த சங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட, பதியப்பட்ட வர்த்தகரொருவருக்கு கடனாக பொருட்களை வழங்கலாம்.

(2) பதிவாளரின் முன் அனுமதியின்றி, விவசாயப் பொருட்களல்லாத வேறு பொருட்கள், அசையும் சொத்துக்கள் எதனையும் பிணையாக ஏற்று கடன்வழங்கல் இயலாததாதல் வேண்டும்.

*பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றினால் ஏற்கப்படுகின்ற வைப்புக் கடன் பணம்.*

39. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று அதன் யாப்பு விதிகள், இந்நியதிச்சட்டத்தின் உபவிதிகள் என்பனவற்றால் குறித்துரைக்கப்படுவதான கட்டுப்பாடுகள், எல்லைகள் என்பவற்றிற்குட்பட்டதாய் மட்டுமே அதன் அங்கத்தவரல்லாதவர்களிடமிருந்து வைப்புக்கள் அல்லது கடன்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று, அதன் அசையாச் சொத்தொன்றினை ஈடாகச் சமர்ப்பித்து வங்கியொன்றிலிருந்து கடன் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில், ஆவணங்கள் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் மேற்குறித்த கடன் தொடர்பான ஆவணங்கள்பதிவு செய்யப்பட்ட தேதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டதும், குறித்த அதே சொத்தின்பால் தத்துவமுடையதுமான ஈடொன்று அல்லது அவ்வாறான பதிவொன்றின் தொடர்புடைய ஈட்டின் பேரில் காப்பு செய்யப்பட்டதான கொடுப்பனவு ஒன்று தவிர்ந்ததான அக்குறித்த சொத்தின் மீது சங்கம் கொண்டுள்ள கடன் அல்லது ஈடுகளுக்கும் மேலாக முன்குறித்த வங்கியின் ஈட்டிற்காக அச்சொத்தினின்றும் முதன்மை செலுத்தல், கடப்பாடு அமைத்தல் வேண்டும்.

40. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால், அதன் உறுப்பினரல்லாத வேறு ஆட்களுடன் செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் அதன் 38, 39 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவானதாயும், உபவிதிகளால் ஆக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், எல்லைகள் என்பவற்றிற்குட்பட்டதாயும் அமைதல் வேண்டும்.

41. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றானது நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 20 ஆம் பிரிவிற்காட்டியவாறான அசையாச் சொத்தொன்றின் பேரில், ஆரம்ப ஈடல்லாத ஒரு காப்புப்பத்திரத்தின் பால் அல்லது ஏதேனுமொரு வங்கியுடன் அல்லது இவ்விடயம் சம்பந்தமாக அனுமதிக்கப்பட்ட வங்கியாளராகக்கடமை புரியும் ஏதேனும் ஆளொருவருடன் அல்லது உபவிதிகளால் குறிப்பிடப்படுவதான வேறு வகைகளால் சங்கத்தின் நிதி முதலீடு செய்யப்படலாம்.

(2) இந்நியதிச்சட்டம் நடைமுறையாகுமிடத்து ஏற்புடையதான, எனினும் இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வருமுன் செய்யப்பட்டதான முதலீடுகள் தொடர்ந்தும் சட்டபூர்வமானதாயமையும்.

42. (1) பதிவு செய்யப்பட்ட சகல சங்கங்களும் இதன் 44 ஆம் பிரிவிற்குறித்தவாறான குறித்த ஆண்டொன்றிற்கான கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளதான நிகர லாபத்தினின்றும்-

(அ) குறித்த நிகர லாபத்தின் இருப்பத்தைந்து வீதத்திற்குக்குறையாத தொகையொன்றை சங்கம் தனது இருப்பு நிதியில் சேர்த்தல் வேண்டும் ;

(ஆ) இதன் உபவிதிகளின் கீழ் தாபிக்கப்பட்டதான கூட்டுறவு நிதியத்திற்கு, அவ்வுப விதிகள் குறித்துரைக்கும் அவ்வாறான பங்கினை வைப்புச் செய்தல் வேண்டும்.

(2) நிகரலாபத்தின் எஞ்சிய பகுதி இதன்கீழ் குறிப்பிடப்பட்டதான எல்லா விடயங்களுக்குமோ அல்லது அவற்றுற் சிலவற்றிற்கோ உபயோகப்படுத்தலாம்.

(அ) உறுப்பினர்களால் பூரணமாக செலுத்தப்பட்ட மூலதனப்பங்குகளுக்காக இதன் உபவிதிகள் வரையறுக்கும் அளவிற்குக் கூடாததாகப் பங்கிலாபப் பணமாக வழங்குதல்.

(ஆ) உறுப்பினர்களால் சங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பேரில் இதன் உபவிதிகள் வரையறுக்கும் அளவினதாய் தள்ளுபடி வழங்கல்.

(இ) யாப்பு விதிகள் அனுமதிப்பதான நிதியமொன்றின் பங்குகளில் வைப்புச் செய்தல்.

(ஈ) ஏதேனுமொரு சமூக, கலாச்சார, பொழுதுபோக்கு விடயத்துக்காக அல்லது பிரதேச, பொதுசனப்பயன்பாடுடைய அல்லது வேறெந்த பொது நோக்கத்தையும் நிறைவேற்றுதற் பொருட்டுப் பயன்படுவதற்காக பொது நலன்புரி நிதியத்திற்கு நிகரலாபத்தின் 10% கூடாத தொகையொன்றைச் செலுத்தல்.

(3) மட்டுப்படுத்தப்படாத பொறுப்புக்களைக் கொண்ட சங்கமொன்றை பொறுத்தமட்டில் பதிவாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரையின்றி அதன் இலாபத்தினை இலாபப்பங்கீடு செய்தல் இயலாததாதல் வேண்டும்.

## VII ஆம் அத்தியாயம்

### கணக்குப்பதிவு, வரவு செலவுக்கணக்கு, கணக்காய்வு விசாரணைகள் அல்லது ஆய்வு

43. (1) பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் தமது வரவு செலவு, சொத்துக்கள் பொறுப்புக்கள், வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாயும் முறையான பதிவுக்களைப் பேணுவதற்காக வகை செய்து கொள்ளல் வேண்டும். சங்கக் கணக்குகள்.

(2) பதிவாளரால் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்ட ஆளொருவரால் விடுக்கப்படும் பணிப்புரைகளுக்கமைவாக சங்கங்கள் தமது சங்க நடவடிக்கை தொடர்பாயும் கணக்குகள், புள்ளி விபரங்கள் என்பவற்றைக் கொண்டதான ஆண்டறிக்கையொன்றினை தயாரித்தல் வேண்டும். அவ்வாறான ஆண்டறிக்கை, குறித்த ஆண்டு முடிவடைந்து மூன்று மாதங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர், பதிவாளருக்கு அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவரொருவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் குறிப்பிடப்பட்டதான ஏற்பாடுகள் எதனையும் செய்யத்தவறும் சங்கமொன்றைப் பொறுத்தமட்டில், அதன் அங்கத்தவர்கள் அனைவரும் குற்றமொன்று புரிந்ததற்கான குற்றவாளிகள் ஆவதுடன், நீதிவான் நீதிமன்றமொன்றில் நடாத்தப்படும் சுருக்க முறை விசாரணையொன்றன்பின் குற்றவாளியென நிரூபிக்கப்படும் அவ்வாறான ஆளொருவர், இரண்டாயிரம் ரூபாய்க்குக் கூடாத தண்டமொன்றுக்கு உட்படல் வேண்டும்.

எனினும், அவ்வாறான குற்றம் தனது அறிவுக்கெட்டிய வகையில் நடைபெறவில்லை எனவும் அல்லது அக்குற்றத்தினைத்தடுப்பதற்குத் தன்னாலான எல்லா முயற்சிகளையும் தான் மேற்கொண்டதாயும் நிரூபிக்குமிடத்து அவ்வாறான ஆளொருவர் மேற்படி குற்றமொன்று புரிந்தவராகக் கருதப்படமாட்டார்.

வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்.

43. (அ) (1) பதிவு செய்யப்பட்ட சங்கமானது தனது இலாப இலக்கு, மூலதனம், மீளவரும் செலவுகள், நிதி, மூலதனச் சொத்து முதலீடும் வரவு செலவு, லாபநட்டம் என்பவற்றைச் சமப்படுத்தும் ஐந்தொகைக் கணக்கு விபரம் கொண்ட சங்கத்தின் வரவு செலவுத் திட்டமொன்றினைத் தயாரித்தல் வேண்டும்.

(2) அவ்வாறான வருடாந்த வரவு செலவுத்திட்டம் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் அதன் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) குறித்த ஒரு வருடத்திற்கான வரவு செலவுத்திட்டப் பிரதியொன்று அந்நிதியாண்டு ஆரம்பிப்பதற்குக் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னர் பதிவாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) அவ்வாறான வரவு செலவுத்திட்டம், அது தயாரிக்கப்பட வேண்டிய மாதிரி, தயாரிக்கப்பட வேண்டிய முறைகள், அதில் அடங்க வேண்டிய குறைந்தபட்ச விபரங்கள் என்பவை பதிவாளரால் தீர்மானிக்கப்பட்டவாறா யமைதல் வேண்டும்.

(5) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் எண்ணிக்கை அதன் வருமானம், செலவு என்பவற்றைக் கருத்திற் கொண்டு அமைச்சரானவர், தான் அவ்வாறு கருமமாற்றுவது ஏற்புடைத்து எனக்கருதும்வாறாக, அப்பிரிவின் படி தேவைப்படுவதான விடயங்களின் எவற்றிலிருந்தும், பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரையொன்றின் மூலம் சங்கமொன்றிற்கு விலக்களிக்கலாம்.

கணக்காய்வு

44. (1) ஒவ்வொரு வருடமும் சகல பதிவுசெய்யப்பட்ட சங்கங்களினதும் கணக்குகள் பதிவாளரால் அல்லது அவரால் வழங்கப்பட்ட எழுத்துமூலமான பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரையின் பேரில் தத்துவமளிக்கப்பட்ட ஆளொருவரால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(2) 1 ஆம் உட்பிரிவிற் காட்டியவாறான கணக்காய்வொன்றில் சங்கத்தினால் அறவிடப்பட வேண்டிய காலம் கடந்த கடன்கள் சம்பந்தமான பரிசீலனை சங்கத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவற்றின் மதிப்பீடு, இவற்றிற்கான சரிபிழை பார்த்தல் என்பன அடங்குதல் வேண்டும்.

(3) 2 ஆம் உட்பிரிவின் கீழ் கணக்காய்வு மேற்கொள்வதற்கென பதிவாளர் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவர் அமையுமிடத்து அவர் பால் -

(அ) பதிவாளர் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவரின் அபிப்பிராயப்படி சங்கத்தின் பணநடவடிக்கை, முகாமைத்துவம் என்பன சார்பாக பூரண விளக்கமளிக்கக்கூடியதான சங்கத்தின் அலுவலரொருவர், முன்னாள் அலுவலரொருவர், பிரதிநிதியொருவர், ஊழியரொருவர் அல்லது உறுப்பினரொருவர் அல்லது வேறு ஆளொருவரை அழைக்க,

(ஆ) சங்க நடவடிக்கைகளுக்குட்பட்ட பதிவேடுகள், பட்டியல்கள் சங்கத்திற்குச் சொந்தமான பணம் காப்புப்பத்திரங்கள் அல்லது வேறு சொத்தொன்றை சமர்ப்பிக்குமாறு அதனைப் பேணும் அல்லது அவற்றிற்குப் பொறுப்பாயுள்ள சங்கத்தின் அலுவலரொருவர், பிரதிநிதியொருவர், ஊழியர் ஒருவர், உறுப்பினர் ஒருவர் அல்லது வேறெவரையும் பணிக்க,

(இ) கணக்காய்வில் தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட தவறொன்று தொடர்பான பதிவேடுகள் அல்லது வேறு தஸ்தாவேஜுகளை தனது பொறுப்பில் ஏற்றுக்கொள்ள தத்துவம் இருத்தல் வேண்டும்.

(4) பதிவாளருக்கு அல்லது அவரால் எழுத்துமூலமாக பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரை வழங்கப்பட்ட ஒருவருக்கு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவேடுகள், பட்டியல்கள் மற்றும் ஆவணங்கள், காப்புப் பத்திரங்கள், கையிறுப்புப் பணம் என்பவற்றை எச்சந்தர்ப்பத்திலும் கையேற்கவும் பரிசீலனை செய்யவும் உரிமை இருத்தல் வேண்டும். மேலும் அவ்வாறான ஆவணங்கள், பதிவேடுகள் என்பவற்றைப் பேணுபவர், பொறுப்பாயிருப்பவர் அவற்றைப் பதிவாளர் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது சங்கத்தின் பணநடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான பதிவாளரால் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவரால் கோரப்படும் விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) பதிவாளரும் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் கணக்காய்வுக்காகப் பதிவாளரால் தத்துவ மளிக்கப்பட்ட அவ்வாறான ஆட்களும் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் சட்டத்துக்குட்பட்டவகையில், அரசாங்க அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும்.

(அ) சங்க நடவடிக்கைகள் அல்லது முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாயுள்ள அல்லது பொறுப்பாய் இருந்த அலுவலர், ஊழியர் அல்லது சங்கத்தின் உறுப்பினர் அல்லது முன்னாள் உறுப்பின ரொருவர் இந்நியதிச்சட்டம், வேறு நடைமுறைச்சட்டங்கள் பதிவாளரால் வழங்கப்பட்ட அனுமதிகள், கூட்டுறவுத்துறை அல்லது நிதி தொடர்பான பொதுவிதிகள், உபவிதிகள், பொதுப் பணிப்புரைகள், பதிவாளர் அல்லது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என்பவற்றால்

வழங்கப்பட்டதான பொது நியமங்கள், சங்க யாப்பு விதிகள், அதன் ஒழுங்குவிதிகள் என்பவற்றில் ஏதேனுமொன்றிற்கு முரணாக சங்கப்பணத்தில் மேற்கொண்ட கொடுப்பனவு ஒன்று அல்லது செய்யப்பட்ட செலவொன்று இதன் 1 ஆம் உட்பிரிவிற்காட்டியதான கணக்காய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டால் பதிவாளர் உடன் அவ்வாறான செலுத்தல்களை அல்லது செலவினை நிறுத்துதல் வேண்டும். அத்துடன் அவ்வாறான முரணான செலவினைச் செய்த அல்லது செய்யுமாறு பணித்த நபரிடமிருந்து அவ்வாறான தொகை ஈடுசெய்யப்பட வேண்டும். மேலும் அவ்வாறான ஆளொருவரின் கவனயீனத்தினால் அல்லது தகாத நோக்கத்தினால் சங்கத்துக்கேற்பட்டுள்ள நட்டம் அல்லது ஒழுங்கு ஏதேனுமிருப்பின் அவையும், அவ்வாறான ஆளொருவரினால் பதியப்பட வேண்டிய வரவு சம்பந்தமான விபரங்கள் பதியப்படாது விடப்பட்டிருப்பின் அவையும் அவரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் அறவிடப்பட வேண்டியதான தொகை உறுதிப்படுத்தப்பட்டு எழுத்துமூலம் குறித்த நபருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(ஆ) அனுமதி பெறப்படாத செயலொன்றை இடைநிறுத்தவோ அல்லது தொகையொன்றினை ஈடுசெய்யும்படியோ நியமம் ஒன்றினை வழங்குவதற்கு முன்னர் பதிவாளர் அல்லது அவரது எழுத்து மூலமான பொதுவான அல்லது சிறப்பான பணிப்பின் பேரில் தத்துவம் பெற்றவரானவர், தான் உசிதமென நினைக்கும்வாறான விடயங்களில் தனது கருத்தினைத் தெரிவிக்குமாறு அந்நபரிடம் கோரல் வேண்டும். பின்னர், பதிவாளர் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவரானவர், தான் வழங்கும் இடைநிறுத்தம் அல்லது ஈடுசெய்யப்படுவதற்கான நியமத்திற்கான காரணமெதுவுமிருப்பின் அதனைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்றினை நியமம் வழங்கப்படுவதான ஆளொருவருக்கு அளித்தல் வேண்டும். இறுதியாகப் பதிவாளர் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவரானவர், தான் எடுத்துள்ள இடைநிறுத்தம் அல்லது ஈடுசெய்யப்படல் நியமத்திற்கான தனது காரணத்தை குறித்த நபருக்கு எழுத்துமூலம் அறியத்தரல் வேண்டும்.

(இ) பதிவாளரால் எடுக்கப்படும் முடிவிற்கு ஒத்தொழுகாத சந்தர்ப்பங்களில் இதன் 66 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தக்க மாற்றங்களுடன் செயற்படுத்தப்படல் வேண்டும்.

**கணக்காய்வுக் குறைபாடுகளை சங்கத்துக்கு அறிவித்தல்.**

45. (1) இதன் 44 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வொன்றில் கண்டு பிடிக்கப்பட்டதான தவறொன்றெனில் அத்தவறு சம்பந்தமாய் பதிவாளர் குறித்த பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு அறியத்தரல் வேண்டும். குறித்த சங்கம் வேறு பதியப்பட்ட சங்கமொன்றில் அங்கம் வகிக்குமிடத்து அவ்வாறு அங்கம் வகிப்பதான சங்கத்திற்கு அறியத்தரல் வேண்டும்.

(2) பதிவாளர், தான் கண்டுபிடித்ததான தவறினை நிவர்த்திசெய்யும் நோக்குடன் தான் குறித்துரைக்கும் நடவடிக்கையை குறித்த காலவெல்லைக்குள் மேற்கொள்ளுமாறு சங்கத்திற்கோ அதன் அலுவலர்களுக்கோ பணிப்புரை வழங்கலாம்.

46. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் தாபனம், அதன் நடவடிக்கைகள், அதன் மூலதன நிலைமை என்பன தொடர்பாய் பரிசீலனை மேற்கொள்ள அல்லது அவ்வாறான பரிசீலனையொன்றை மேற்கொள்ளுமாறு எழுத்துமூலமான நியமம் ஒன்றின் மூலம் தன்னால் தத்துவமளிக்கப்பட்ட ஒருவருக்குப் பணிப்புரை வழங்கல் என்பவற்றைப் பதிவாளர் தற்றுணிபின் பேரில் மேற்கொள்ளலாம் அல்லது குறித்தவொரு சங்கத்தின் பணிப்பாளர்களுள் பெரும்பான்மையினர் அல்லது அதன் முழு உறுப்பினரில் மூன்றில் இரண்டிற்கும் குறையாத தொகையினர் விடுக்கும் வேண்டுகோளொன்றின் பேரில் அவ்வாறான பரிசீலனையொன்றிற்காகப் பணிப்புரை வழங்கல் வேண்டும்.

(2) இதன் 1 ஆம் பிரிவிற்கமைய பரிசீலனை மேற்கொள்ளும் பதிவாளருக்கு அல்லது அவ்வாறான பரிசீலனையொன்றினை மேற்கொள்வதற்காகப் பணிக்கப்பட்டவொருவருக்கு —

(அ) பதிவாளரின் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவரின் கருத்துப்படி குறித்த சங்கத்தின் வர்த்தக நடவடிக்கை, அதன் முகாமைத்துவம் என்பது பற்றி முக்கிய தகவல்கள் தரக்கூடியவரெனக் கருதப்படும் சங்கத்தின் அலுவலர், முன்னாள் அலுவலர், ஊழியர், பிரதிநிதி அல்லது உறுப்பினரொருவரை அழைக்கப்படுவதற்கு.

(ஆ) சங்கத்தின் நடவடிக்கை தொடர்பான பதிவேடுகள், பட்டியல்கள், சங்கத்துக்குச் சொந்தமான பணம், காப்புப் பத்திரங்கள், வேறு சொத்துக்கள் என்பவற்றைச் சமர்ப்பிக்குமாறு அவற்றுக்கும் பொறுப்பாயுள்ள அல்லது தன்வசம் கொண்டுள்ள அலுவலர், முன்னாள் அலுவலர், ஊழியர், பிரதிநிதி அல்லது உறுப்பினர் என்பவர்களைப் பணிப்பதற்கு.

(இ) தன்னால் நியமம் செய்யப்படவுள்ள ஏதேனும் விடயம் தொடர்பாய் தீர்மானம் மேற்கொள்வதற்காக சங்கத்தின் பொதுக்கூட்டத்தினை குறித்த நாளொன்றின், குறித்த நேரத்தில் கூட்டுவதற்கு.

(ஈ) பரிசீலனையின் இடையில், மோசடியொன்று அல்லது ஒழுங்கீனம் ஒன்று நடைபெற்றுள்ளதற்கான நம்பகமான தடையம் கிடைக்குமிடத்து, குறித்த சங்கத்தின் பதிவேடுகள், கணக்குப் பதிவுகள் என்பவற்றைத் தனது பாதுகாப்பில் எடுப்பதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இதன் 2 (இ) உட்பிரிவின் கீழ் கூட்டப்படுவதான பொதுக்கூட்டமொன்றிற்கு யாப்பு விதிகளின்கீழ் பொதுக்கூட்டமொன்றிற்குள்ளதான சகல அதிகாரங்களும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறான கூட்டமொன்றிற்கான நடப்பெண் பொதுக்கூட்டமொன்றினைக் கூட்டுவதற்காக, அறிவித்தல் கொடுக்கவேண்டிய குறைந்தபட்ச காலவெல்லை என்பன தவிர்ந்த மற்றெல்லா கூட்ட ஒழுங்கு விதிகளும் பின்பற்றப்பட்டதால் அவ்வாறான பொதுக்கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். பதிவாளர் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்டவரானவர் அவ்வாறான பொதுக்கூட்டமொன்றில் தலைமை வகிக்கலாம், எனினும் அவர் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையுடையவராதல் கூடாது. கூட்ட விடயமொன்றின் பேரில் சம தொகையான வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் தீர்மான வாக்கொன்றினைப் பிரயோகிக்க கூடியவராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் பரிசீலனையொன்று நடாத்தப்பட்டவிடத்து அப்பரிசீலனையின் முடிவுகள் பதிவாளரால், குறித்த சங்கத்திற்கும் அவ்வங்கத்துவம் வகிக்கம் வேறு பதியப்பட்ட சங்கமொன்றிருப்பின் அச்சங்கத்திற்கும், குறித்த சங்கம் கடன் பெற்றிருப்பதான வங்கிக்கும் அறியத்தரல் வேண்டும்.

(5) பதிவாளரும் அப்பிரிவின்கீழ் பரிசீலனையொன்று நடத்துவதற்காக அவரின் தத்துவமளிக்கப்பட்டவர்களும் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவைச் சட்டங்களிற்கமைய, அரசாங்க அலுவலர்களென கருதப்படல் வேண்டும்.

*சங்கத்தின் புத்தகங்களைப் பரிசீலனை செய்தலும் அதன் கடமைகளை விமர்சித்தலும்.*

47 (1) பதிவாளர் தற்றுணிபின் பேரில் அல்லது குறித்த சங்கமொன்றின் பணவைப்புச் செய்துள்ள உறுப்பினரொருவரின் வேண்டுகோளொன்றின் பேரில் சங்கமொன்றினது கணக்குப் பதிவுகளைப் பார்வையிடலாம் அல்லது அதற்காக எழுத்து மூலமான, பொதுவான அல்லது விசேடமான பணிப்புரையொன்றினால் தத்துவமளிக்கப்பட்ட ஆளொருவரால் அப்பதிவுகள் பார்வையிடப்படலாம்.

எனினும், அவ்வாறான பரிசீலனையொன்றிற்கான வேண்டுகோளொன்றை விடுக்கும் உறுப்பினர் -

(அ) தனக்குச் செலுத்தப்பட வேண்டுவதான ஏதேனுமொரு கொடுப்பனவு சங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை என்பதனையும், தனக்கான பணத்தைச் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டும் சாதாரண ஏற்றுக் கொள்ளக்கூடியதான கால எல்லையொன்றிற்குள் அப்பணம் தனக்குச் செலுத்தப்படவில்லை என்பதனை நிரூபிக்காதவிடத்து ; அல்லது

(ஆ) கோரப்பட்டதான பரிசீலனைக்கான கட்டணமாகப் பதிவாளரால் நிர்ணயிக்கப்பட்டதான தொகை, பிணையாக உறுப்பினரால் வைப்புச் செய்யப்படாதவிடத்து,

சங்கமொன்றில் பணவைப்புச் செய்துள்ள அவ்வாறான உறுப்பினரின் வேண்டுகோளின் பேரில் பரிசீலனையொன்று மேற்கொள்ளப்படல் ஆகாததாதல் வேண்டும்.

(2) பதிவாளர், தான் நேரிடையாகவோ அல்லது தன்னால் தத்துவமளிக்கப்பட்ட நபரொருவர் மூலமாக ஏதேனுமொரு சங்கத்தின் நடவடிக்கைகளை பரிசீலனைக்கு உட்படுத்தலாம்.

(3) பதிவாளருக்கு அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு --

(அ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் சகல பதிவேடுகளையும் கணக்குப் பதிவுகளையும், வைப்புப் பத்திரங்கள் என்பவற்றை எச்சந்தர்ப்பத்திலும் பரிசீலனை செய்வதற்கு வசதியிருத்தல் வேண்டும். அத்துடன் சங்கமொன்றின் இருப்புப் பணத்தைப் பரிசீலிக்க உரிமை இருத்தல் வேண்டும். அத்துடன் விசாரணையொன்றினை அல்லது பரிசீலனையொன்றினை மேற்கொள்ளும் நபருக்குத் தேவையான, சங்கத்தின் கொடுக்கல் வாங்கல் மற்றும் அதன் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் சங்க அலுவலர்களால் அல்லது உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) குறித்த சங்கமொன்றின் நடவடிக்கைகள் பரிசீலனைக்குட்படுத்தப்படுமிடத்து அல்லது விசாரணைக்குட்படுத்தப்படுமிடத்து அச்சங்கத்தின் நடவடிக்கையில் மோசடியொன்று நிகழ்ந்துள்ளமை கண்டுபிடிக்கப்படுமிடத்து அச்சங்கத்தின் கணக்குப் பதிவேடுகள், கோவைகள் என்பவற்றை தனது பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்பதற்கான அதிகாரம் பரிசீலனை செய்பவருக்கு இருத்தல் வேண்டும்.

(4) அவ்வாறான பரிசீலனையொன்றின் முடிவுகள் —

(அ) பரிசீலனை, பதிவாளரின் தற்றுணிபின்பேரில் நடாத்தப்பட்டதொன்றெனின் அவரால் குறித்த சங்கத்திற்கும் அச்சங்கம் கடன் பெற்றுள்ள வங்கிக்கும் அறியத்தரல் வேண்டும்.

(ஆ) சங்கத்தின் பண வைப்புச் செய்துள்ள உறுப்பினரொருவரின் வேண்டுகோளின்பேரில் நடைபெற்ற பரிசீலனையெனின், அதன் முடிவுகள், அவ்வுறுப்பினருக்கும் சங்கத்திற்கும் அறிவிக்கப்படல் வேண்டும்.

(5) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் பண வைப்புச் செய்துள்ளவரொருவரின் வேண்டுகோளின் பேரில் நடைபெற்ற பரிசீலனையொன்றிற்கான கட்டணத்தை, பதிவாளரானவர் தான் ஏற்புடையது எனக்கருதும்வாராக, அக்கட்டணத்தைப் பூரணமாக அல்லது அதன் ஒரு பகுதியை சங்கம், கோரிக்கை விடுப்பவர் எனும் இரு பகுதியினர் இடையே பகுக்கலாம்.

(6) சங்கமொன்று அல்லது பணம் வைப்புச் செய்தவரொருவர் தொடர்பாய் இப்பிரிவின்கீழ் அறவிடப்படவேண்டிய கட்டணம் செலுத்தப்பட்டிராதவிடத்து, அச்சங்கம் அமைந்துள்ள முகவரி அல்லது கோரிக்கை விடுக்கப்பட்டவர் வதியும் முகவரியுள்ள பகுதிக்கு அதிகாரம் கொண்ட நீதிவான் நீதிமன்றமொன்றிற்குச் சமர்ப்பிக்கப்படுவதான அறிவித்தலின் பேரில், அந்நீதிமன்றம் தண்டப்பணமொன்று அறவிடுவதான வகையில் மேற்படி கட்டணத்தை அறவீடு செய்யலாம்.

(7) பதிவாளர் அல்லது அவரால் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவேடுகளைப் பரிசீலனை செய்வதற்கு அல்லது விசாரணையொன்றை நடாத்துவதற்குத் தத்துவமளிக்கப்பட்ட ஒருவர் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் சட்டங்களுக்கமைய அரச அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் நடாத்தப்படும் விசாரணை அல்லது பரிசீலனை சம்பந்தமாக பதிவாளருக்கு அல்லது அவரால் அவ்வாறான விசாரணை அல்லது பரிசீலனையொன்றினை நடாத்துதற்காய் தத்துவமளிக்கப்பட்ட ஒருவருக்கு –

(அ) குறித்த சங்கத்தின் கொடுக்கல் வாங்கல் அல்லது அதன் வேறு நடவடிக்கைகளை நிர்வகித்தல் தொடர்பான முக்கியமான தகவல்களை வழங்கத்தக்கவர் என பதிவாளர் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்ட ஒருவர் கருதுபவரான சங்கத்தின் உறுப்பினர் அல்லது முன்னாள் உறுப்பினர், அலுவலர், ஊழியர் அல்லது பிரதிநிதியொருவர் அல்லது வேறு ஆளொருவரை அழைப்பதற்கு,

(ஆ) சங்க நடவடிக்கை தொடர்பான, பதிவேடுகள் பட்டியல், இருப்புப்பணம், காப்புப் பத்திரம் அல்லது தன்பால் கொண்டுள்ளவரான சங்கத்தின் பொறுப்பாளர் அல்லது தன்பால் கொண்டுள்ளவரான சங்கத்தின் அலுவலர், முன்னாள் அலுவலர், ஊழியர், உறுப்பினர் அல்லது வேறு ஆளொருவரை அவற்றைச் சமர்ப்பிக்குமாறு பணிக்கப்படுவதற்கு,

(இ) தன்னால் நியமம் செய்யப்போவதான விடயம் சம்பந்தமாய் தீர்மானம் மேற்கொள்வதற்காக சங்கத்தின் பொதுக்கூட்டமொன்றை குறித்த நாளொன்றில் குறித்த நேரத்தில் கூட்டுவதற்கு,

(ஈ) விசாரணையின் இடையில் மோசடியொன்று அல்லது ஒழுங்கீனம் ஒன்று நடைபெற்றுள்ளதாய் நம்பகரமான சாட்சிகள் இருக்குமிடத்து சங்கத்தின் பதிவுகள், பட்டியல்கள் என்பவற்றைத் தனது பொறுப்பில் ஏற்பதற்கு,

தத்துவமுடையவராதல் வேண்டும்.

## VIII ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அலுவலர்களை வேலை நீக்கம் செய்தல், இடைநிறுத்தல், தடுத்து வைத்தல், பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் செயற்குழுவினைக் கலைத்துவிடல்

சங்கமொன்றின் செயற்குழுவைக் கலைத்துவிடல்.

48. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் செயற்குழுவானது தகுந்த முறையில் செயற்படத் தவறியுள்ளது என, இதன் 4 ஆம் பிரிவின் கீழ் நடைபெற்றதான விசாரணையொன்றில் அல்லது இதன் 47 ஆம் பிரிவின் கீழ் நடைபெற்றதான பரிசீலனை அல்லது ஆய்வென்றில் கண்டுபிடிக்கப்படுமிடத்து, பதிவாளரானவர், தான் எடுக்கும் முடிவுக்கு எதிராகக் காட்டக்கூடிய காரணமெதுவுமிருப்பின் அதற்கான சந்தர்ப்பம் ஒன்றினை வழங்கியதன் பின்னர் தன்னால் கூட்டப்படும் பொதுக்கூட்டமொன்றில் அக்காரணங்களைச் சமர்ப்பிப்பதன் மீது —

(அ) அச்செயற் குழுவினைக் கலைக்கலாம் ; அத்துடன்

(ஆ) இதனகத்துப் பின்னர் காட்டப்படுவதான ஏற்பாடுகளுக்கமைய குறித்த சங்கத்தின் நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்தவும் நிர்வகிக்கவும் தகுந்த ஆளொருவரை அல்லது ஆட்களை நியமிக்கலாம்.

(2) இதன் 1 ஆம் (ஆ) உட்பிரிவின் கீழான பணிப்பொன்றானது இரண்டு வருடகாலத்துக்குக் கூடாததான, குறித்த ஒருகால எல்லைக்கு மட்டுமே வலுவுடையதாதல் வேண்டும்.

எனினும் பதிவாளர், ஏற்புடையது எனக் கருதுமானவாறு தனது பணிப்புரைக்குக் காலத்துக்குக் காலம் மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலம் அதன் காலவெல்லையை விரிவுபடுத்தலாம். எவ்வாறெனினும் அவ்வாறான மாற்றங்களினால் விரிவுபடுத்துவதான காலவெல்லை முழுமையாக நான்கு வருடத்துக்குக் கூடாததாதல் வேண்டும்.

(3) இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்புரையொன்றினை வழங்கும் பதிவாளரானவர் அதே பணிப்புரையில் அல்லது பிறிதொரு பணிப்புரையால் குறித்த சங்கத்தின் நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்தவும் நிர்வகிக்கவும் என தகுந்த ஆளொருவரை, இருவரை அல்லது அதற்கு மேற்பட்டவரை நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் காலத்துக்குக் காலம் நீக்கப்பட்டு வேறு ஆட்கள் நியமிக்கப்படக்கூடுமாதல் வேண்டும், என்பதுடன் தேவையேற்படின் மேலதிக ஆட்களை நியமிக்கவும் கூடுமாதல் வேண்டும்.

(4) பதிவாளரின் பொதுப்பணிப்புரைக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அமைவாக பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்படும் அவ்வாறான ஆளொருவர் அல்லது ஆட்களுக்கு —

(அ) சங்கத்தின் நன்மை கருதி அதன் சொத்துக்களை மீட்டெடுப்பதற்கு, அதன் பொறுப்புக்களை நீக்குவதற்கும் அத்துடன் ஏற்றது எனக் கருதுவதான மற்றும் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்குமான தத்துவம் அமைதல் வேண்டும்.

(ஆ) சங்கத்தின் முறையாக அமைக்கப்பட்ட செயற்குழுவொன்றிற்கு இருக்க வேண்டியதான சகல தத்துவங்கள், உரிமைகள், சலுகைகள் என்பன இருத்தல் வேண்டும். அத்துடன் சங்கத்தின் நடவடிக்கைகள் திறமையாக நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக தேவைப்படுமிடத்து சங்கத்தின் பொதுச் சபையின் பாலுள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கவும் பொதுச் சபையினைத் தவிர்க்கவும் கூடியதாயமைதல் வேண்டும்.

(5) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்ட அவ்வாறானவர்களால் சட்டத்திற்கும் சங்கத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் மேற்கொள்ளப்படும் செயல் ஒன்றினால் ஏற்படும் நட்டமேதுமிருப்பின் அவ்வாறானவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்படையவராதல் வேண்டும்.

(6) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென நியமிக்கப்பட்ட ஆளொருவருக்கு அல்லது ஆட்களுக்காக செலுத்தப்படுவதான வேதனம் பற்றி பதிவாளரானவர் நிர்ணயம் செய்யலாம். அவ்வாறு நிர்ணயம் செய்யப்படுவதான வேதனம் மற்றும் கொடுப்பனவுகளை அச்சங்கம் ஏற்றல் வேண்டும்.

(7) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென இப்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் ஆட்கள் அப்பிரிவின் 1 ஆம் (ஆ) உட்பிரிவில் காட்டியவாறான பணிப்புரை வழங்கப்பட்ட காலவெல்லை முடிவடைய நேர் முன்னர் பதவி வகிப்பவர் காலம் முடிவடையுமுன்னர் சங்க ஒழுங்கு விதிகளுக்கமைய அச்சங்கத்திற்கான செயற் குழுவொன்றினை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளல் வேண்டும்.

(8) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று தொடர்பாய் —

(அ) அச்சங்கம், வங்கியொன்றிலிருந்து கடன் பெற்றிருப்பின், சங்கத்தின் செயற்குழுவினைக் கலைத்து அதன் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக ஆளொருவரை அல்லது பலரை நியமிப்பது பற்றியும் அவர்களால் அச்சங்க நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படவுள்ள முறை பற்றியும் அவ்வங்கியுடன் கலந்தாலோசியாது; அல்லது

(ஆ) அச்சங்கம் கூட்டுறவு வங்கியாயிருக்குமிடத்து மக்கள் வங்கியின் முன் அனுமதியின்றியும்

பதிவாளரானவர் இதன் 1ம் உட்பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளலாகாததாதல் வேண்டும்.

(9) இப்பிரிவின் எந்தவொரு ஏற்பாடும் இந்நியதிச் சட்டத்தின் 49ம் பிரிவின் கீழ், சங்கமொன்றின் பதிவினை ரத்துச் செய்வதற்காய் பதிவாளர் பால் உள்ளதான தத்தவங்கள் எதனையும் பாதிக்க மாட்டாது.

(10) இதன் 46 ம் பிரிவின் கீழான விசாரணை அல்லது 47 ம் பிரிவின் கீழான பரிசீலனை ஆய்வு ஒன்று நடைபெற்று முடிவுறும் முன்னர் குறித்த சங்கத்தின் செயற்குழுவிற்கெதிராக நம்பகமான குற்றங்கள் உண்டென பதிவாளர் கருதுமிடத்து, அச்செயற்குழுவினை ஆறு மாத காலத்துக்குத் தடுத்து வைப்பதற்கும் சங்கத்தின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக இடைக்காலக் குழுவொன்றினை நியமிப்பதற்கும் பதிவாளர் தத்துவம் கொண்டவராதல் வேண்டும். மேற்கூறிய தடையுத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து ஆறு மாத காலத்துள் அப்பரிசீலனையை அல்லது ஆய்வினை முடிவுறச் செய்து இதன் 1 ஆம் பிரிவின் கீழ் அச்செயற்குழுவினைக் கலைப்பதற்காக இறுதி முடிவினை எடுத்தல் வேண்டும்.

48. (அ) (I) இதன் (II) 46 ஆம் பிரிவின் கீழான விசாரணை அல்லது 47 ஆம் பிரிவின் கீழான பரிசீலனையொன்று நடைபெற்றதன் பேரில் பதிவாளரானவர் குறித்த சங்கத்தின் அலுவலரொருவர் அல்லது ஊழியர் ஒருவர் தனது கடமையை முறைப்படி செய்யத் தவறியுள்ளார், எனவே அவ்வாறான கடமையைச் செய்யும் தகுதியற்றவர் எனவே, தனது கடமையை நிறைவேற்றும் திறமையற்றவர் எனவோ கருதுமிடத்து இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்திற்கு, அல்லது வேறு நடைமுறைச் சட்டங்களுக்கு முரணாகாத வகையில் குறித்த ஊழியருக்கெதிரான அத்தீர்மானத்தின் பேரில் தனது மறுப்பினைத் தெரிவிக்க தகுந்தவொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதன் பின்னர் அவ்வாறான ஊழியரைக் கடமையினின்றும் தடுத்து வைக்கலாம். இடைநிறுத்தலாம் அல்லது அவ்வாறான விசாரணை பூரணமானதன் பின்னர் தடுத்து வைக்கப்பட்ட அல்லது இடை நிறுத்தம் செய்யப்பட்ட அவ்வூழியரை வேலை நீக்கம் செய்யலாம். அலுவலர்களின் சேவையை இடை நிறுத்துதல், தடை செய்தல், நீக்குதல் ஆகியன.

எனினும் அவ்வாறான வேலை நீக்க உத்தரவொன்றுக்கெதிராக ஊழியரொருவர், 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஆணைக்குழுவிற்கு அவ்வாறான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மேன்முறையீடொன்றினை செய்து கொள்ளலாம். இவ்விடயத்தில் குறித்த ஆணைக்குழுவின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டதான உத்தரவு மேன்முறையீடொன்றன் பின்னர் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் உறுதிசெய்யப்படுமிடத்து அல்லது அவ்வுத்தரவுக்கெதிராக 30 நாட்களுக்குள் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிராதவிடத்து குறித்த பதவிக்காக வேறு அலுவலர் அல்லது ஊழியரை தெரிவு செய்யலாம் அல்லது நியமிக்கலாம்.

## IX ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினைக் கலைத்தல்

49. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் மொத்த உறுப்பினருள் நான்கில் மூன்று பங்கினரால் அச்சங்கம் கலைக்கப்படவேண்டுமென கேட்கப்படுமிடத்து அல்லது இதன் 46 ஆம் பிரிவின் கீழ் நடைபெற்ற விசாரணையொன்றின் முடிவின் பேரில் அல்லது இதன் 47 ஆம் பிரிவின் கீழான பரிசீலனையொன்றின் பின்னர் பதிவாளர் தான் எடுத்துள்ள தீர்மானத்திற்கெதிராக அச்சங்கத்தில் வைப்புச் செய்துள்ளவர்கட்கு தனது முடிவிற்கெதிராகக் காரணம் காட்டுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றினை வழங்கியதன் பின்னர், அச்சங்கம் கலைக்கப்படல் வேண்டும் எனப் பதிவாளர் இறுதி முடிவெடுக்குமிடத்து குறித்த சங்கத்தின் பதிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளதான ஆணையினைத் தனது கையொப்பத்துடன் பிறப்பிக்கலாம். கலைத்தல்.

(2) இதன் (அ) உட்பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்டதான ஆணையொன்றுக்கெதிராக குறித்த சங்கத்தின் எந்தவொரு உறுப்பினரும் அல்லது பண வைப்புச் செய்துள்ளவரும், மேன்முறையீடொன்றினை ஆணை பிறப்பிக்கப்பட்ட இரண்டு மாதத்துக்குள், மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சருக்குத் தாக்கல் செய்யலாம்.

(3) சங்கமொன்றின் பதிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளதான ஆணையொன்று பிறப்பிக்கப்பட்டு, இரண்டு மாத காலத்துக்குள் அவ்வாணைக்கெதிராக மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிராதவிடத்து அவ்வாறான இரண்டு மாத கால முடிவுடன் நடைமுறைக்கு வருதல் வேண்டும். இரண்டு மாதத்திற்குள் மேன் முறையீடொன்று கிடைக்கப் பெற்றிருப்பின், வழங்கப்பட்ட ஆணை ஊர்ஜிதம் செய்யப்படும்வரை நடைமுறைக்கு வராதிருத்தல் வேண்டும்.

(4) இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவு ரத்துச் செய்யப்படுவதுடன் பதிவாளரானவர், அச்சங்கத்தின் பதிவேடுகள், சொத்துக்கள் என்பவற்றுடன் அச்சங்கத்தின் நடவடிக்க்கை என்பவற்றை அவ்வாறான ஆணை நடைமுறைக்கு வரும் தேதிவரை அல்லது அவ்வாணையின் பேரிலான மேன்முறையீடொன்று பரிசீலிக்கப்பட்டு அவ்வாறான ஆணை மாற்றியமைக்கப்படுமெனின் அதுவரையும், பொறுப்பேற்பதற்காக, ஆளொருவரை அல்லது பலரை நியமிக்கலாம்.

அவ்வாறான பொறுப்பாளர் அல்லது பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுமிடத்து, குறித்த சங்கத்தின் பதிவேடுகள், புத்தகங்கள், சொத்துக்கள் என்பவற்றிற்குப் பொறுப்பாயிருந்த சங்கச் செயற்குழு அல்லது வேறு ஆளொருவர், அவ்வாறான சங்கப் பதிவேடுகள், புத்தகங்கள் சொத்துக்கள் என்பவற்றை முன் கூறப்பட்டதான நியமனம் பெற்ற பொறுப்பாளர் அல்லது பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும். மேலும் சங்கம் கலைக்கப்படுவதான ஆணை நடைமுறைக்கு வரும் வரை அல்லது மேன்முறையீடொன்றின் பேரில் அவ்வாணை மாற்றம் செய்யப்படும் வரை சங்கத்தின் செயற்குழு செயல் இழந்ததாகும்.

50. பதிவாளர் பின்வரும் காரணங்களுக்காக பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவினை எழுத்து மூலம் அறிவித்து ரத்துச் செய்யலாம் :- சங்கத்தின் பதிவினை இரத்துச் செய்தல்.

(அ) சங்கமொன்றினைப் பதிவு செய்யும் போது அச்சங்கம் குறைந்த பட்சம் பத்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற விதி விதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், குறித்த சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை பத்துக்கும் குறைவுபடுமிடத்து.

(ஆ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்துள் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்திராதவிடத்து அல்லது பதிவு ரத்து செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்வதான தேதிக்கு முன்னுள்ள இரண்டு வருட காலத்துக்குச் செயல்படாதிருக்குமிடத்து.

பதிவினை இரத்துச் செய்யும் அதிகாரம்.

51. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவு இதன் 49 ஆம் பிரிவின் கீழ் ரத்துச் செய்யப்படுமிடத்து அல்லது இதன் 50 ஆம் பிரிவின் கீழ் ரத்துச் செய்யப்படுமிடத்து இதனகத்துப் பின்னர் "கலைக்கப்பட்ட தேதி" யெனக் குறிப்பிடப்படுவதான, அவ்வாறான ரத்துச் செய்வதான ஆணையொன்று நடைமுறைக்கு வரும் தேதியுடன் அச்சங்கம் தாபனமொன்றாக இயங்கும் தன்மையை இழந்து விடல் வேண்டும்.

எவ்வாறாயினும் இந்நியதிச் சட்டத்தினால் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சிறப்புரிமைகள் பதிவாளரினால் அச்சங்கத்துக்காக நியமிக்கப்பட்ட ஒடுக்குனர் அல்லது ஒடுக்குனர்களுக்கு தத்துவமாக்கப்படுகிறது என கருதலாம்.

சங்கத்தின் பதிவொன்றை இரத்துச் செய்தபின் ஒடுக்குதல்.

52. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவு இதன் 49 ஆம் பிரிவின் கீழ் அல்லது 50 ஆம் பிரிவின்கீழ் ரத்துச் செய்யப்படுமிடத்து அச்சங்கத்தின் நடவடிக்கைகளை ஒடுக்குதல் நோக்கத்துக்காக அவ்வாறான ஆளொருவரை அல்லது பலரை நியமிக்கலாம்.

இதன் 49 ஆம் அல்லது 50 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படுவதான ரத்தாணையொன்று நடைமுறைக்கு வரும் தேதியுடன் சங்கத்தின் சகல சொத்துக்களும் நியமிக்கப்பட்டவரான ஒடுக்குனர், அல்லது ஒடுக்குனர்கள் பால் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

ஒடுக்குனரின் அதிகாரம்.

53. (1) இதன் 52 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படுவதான ஒடுக்குனர் பதிவாளரால் வழங்கப்படும், எல்லைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக,

(அ) சங்கத்தின் உறுப்பினர், முன்னாள் உறுப்பினர் அல்லது மரணித்த உறுப்பினரிடமிருந்து, சங்கத்திற்குச் சேர வேண்டியதான கொடுப்பனவுகள் பற்றிக் காலத்துக்குக் காலம் நிர்ணயித்தல்.

(ஆ) சங்கத்தில் வைப்புச் செய்துள்ளவர்கள் தங்களின் பாத்தியதைகள் முறையாகச் சங்கப் பதிவுகளில் சேர்க்கப்பட்டில்லை என்பதையோ, அல்லது தங்களுக்கு அவ்வைப்புகள் மீளளிக்கப்பட்டுள்ளது என தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையோ நிரூபிக்கக்கூடியதான காலவெல்லையொன்றினைக் குறித்து அறிவித்தலொன்றை அல்லது பகிரங்கப்படுத்தலொன்றை மேற்கொள்ளல்.

(இ) வைப்புச் செய்துள்ளவர் தொடர்பாய் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக முன்னுரிமையைத் தீர்மானித்தல்.

(ஈ) இதன் 58 ஆம் பிரிவிற் குறிப்பிடப்படுவதான பிணக்குகளைப் பிணக்கு விசாரணைக்குச் சமர்ப்பித்தல், (அப்பிரிவின் கீழ் "சங்கம்" எனக் குறிப்பிடும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒடுக்குனரையும் அது குறித்து நிற்கும்) சங்கத்தினால், சங்கத்திற்கெதிராக அல்லது சங்கத்தின் சார்பாக தொடரப்பட்டுள்ள வழக்குகள் அல்லது வேறு நீதி நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்தல்.

(உ) ஒடுக்குதல் நடவடிக்கைக்கான செலவினங்களை, எவரிடமிருந்து எவ்விகிதாசாரத்தில் அறவீடு செய்வது என்பதனை தீர்மானித்தல்.

(ஊ) சங்கக் கணக்குகள் எவ்வாறு ஒன்று சேர்க்கப்படல் வேண்டும் என்பதையும் அது எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்பதையும் தீர்மானித்தல்.

(எ) பதிவாளரின் முன் அனுமதியுடன் சங்கத்தின் அல்லது சங்கத்திற்கெதிரான கேள்விகளைத் தீர்த்து வைத்தல்.

(ஏ) முறையான ஒடுக்கினை மேற்கொள்வதற்கவசியமெனும் பொதுக் கூட்டங்களைக் கூட்டுதல்.

(ஐ) சங்கத்தின் பதிவேடுகள், ஆவணங்கள் சொத்துக்கள் என்பவற்றைப் பொறுப்பேற்றல்.

(ஒ) சங்கத்தின் சொத்துக்களை விற்பனை செய்தல்.

(ஓ) சங்கத்தின் நடவடிக்கைகளை நற்பெறுபேறுடன் முடிவுறச் செய்யும் நோக்குடன் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்தல்.

எனினும் கடன் வழங்கும் சங்கமொன்றினைப் பொறுத்தமட்டில் புதிய கடன் எதனையும் வழங்கும் அதிகாரம் இதன் எந்த ஏற்பாட்டின் அடிப்படையிலும் ஒடுக்குனர்பால் வழங்கப்பட்டதாயமையாது.

(ஔ) பதிவாளரால் அனுமதிக்கப்பட்டதான திட்டமொன்றினடிப்படையில் சங்கத்தின் சொத்துக்களை இலகுவான முறையொன்றால் பகிர்ந்தளித்தல் என்பவற்றிற்கான தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) இதன் 49 ஆம் அல்லது 50 ஆம் பிரிவின்கீழ் பதிவு ரத்துச் செய்யப்படாத சங்கத்தின் உறுப்பினர் அல்லது அதன் முன்னாள் உறுப்பினரொருவரிடமிருந்து சங்கத்திற்குச் செலுத்தப்படுவதான ஏதேனும் தொகையொன்றுண்டெனில். அவ்வுறுப்பினர் கலைக்கப்படுவதான சங்கத்தின் பதிவு ரத்துச் செய்யப்பட்டதற்குப் பிந்திய தேதியில் பதிவு செய்யப்பட்ட வேறு சங்கமொன்றில் உறுப்பினராயிருக்குமிடத்து இதன் 52 ஆம் பிரிவிற்கமைய நியமிக்கப்பட்டவரான ஒடுக்குனர், பதிவாளரின் வழிகாட்டல் அல்லது கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் இதன் 54 ஆம் பிரிவின்கீழ் பதிவாளரால் வழங்கப்படுவதான எல்லைகளுக்குட்பட்டதாயும், அவ்வுறுப்பினர் தற்போது அங்கம் வகிக்கும் சங்கத்தினின்றும் உறுப்பினருக்குச் சேரவேண்டியதான தொகையொன்றிலிருந்து கலைக்கப்பட்ட சங்கத்திற்குச் சேரவேண்டிய கொடுப்பனவை, அது அக் குறித்த சங்கத்திற்குச் சேரவேண்டிய தொகையொன்றினை அறவீடு செய்யும்வாறாக அறவீடு செய்யுமாறு வேண்டலாம். மேலும் அவ்வாறு அறவிட்ட தொகையை ஒடுக்குனருக்குச் சமர்ப்பிக்குமாறும் பணிக்கலாம்.

(3) சந்தர்ப்பம் தேவைப்படுத்தும்வாறாக, ஆக்கப்பட்டதான உப விதிகளுக்கமைவாக, இந்நியதிச் சட்டத்தினால் நியமிக்கப்படுவரான ஒடுக்குனர் ஒருவர் இப்பிரிவின் ஏற்பாடுகள் தேவைப்படுத்துவதான தத்துவங்களைக் கொண்டவராய், தான் தொடர்புடையவர் எனக்கருதுபவர்களை, சாட்சிகளை, தெரிவாகுமாறு அழைப்பாணை விடுக்கவும், தெரிவாதலை வற்புறுத்தவும், ஆவணங்கள் மற்றும் பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு நிர்ப்பந்திக்கவும் சிவில் நடைமுறைச் சட்டக்கோவையின் கீழ் மாவட்ட நீதி மன்றமொன்றிற்குள்ளதான தத்துவங்களையொத்த தத்துவம் கொண்டவராதல் வேண்டும்.

ஒடுக்குதலை கட்டுப்படுத்த பதிவாளருக்குள்ள தத்துவங்கள்.

54. ஒடுக்குனரொருவர், பதிவாளரின் பொதுப்பணிப்புகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அமைய தனது தத்துவங்களைப் பிரயோகப்படுத்தல் வேண்டும் என்பதுடன் பதிவாளரானவரால் —

(அ) ஒடுக்குனர் வழங்கிய கட்டளையொன்றினைத் திருத்த, நீக்கம் செய்ய, அல்லது தேவைக்கேற்ப வேறு கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

(ஆ) நியமித்த ஒடுக்குனரை நீக்கிவிட்டு வேறு ஒடுக்குனரொருவரை நியமிக்கலாம்.

(இ) சங்கமொன்றின், கணக்குப் புத்தகங்கள், பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு பணிக்கலாம்.

(ஈ) எழுத்து மூலமான பணிப்பொன்றினால், இதன் 53 ஆம் பிரிவின் கீழ் ஒடுக்குனருக்கு வழங்கப்பட்டதான தத்துவங்களைக் கட்டுப்படுத்தலாம்.

(உ) தற்றுணிபின் பேரில் சங்கக் கணக்குகளைச் சமர்ப்பிக்கும்படி ஒடுக்குனரைப் பணிக்கலாம்.

(ஊ) ஒடுக்குனரின் கணக்கு வழக்குகளை, கணக்காய்வு செய்யப் பணிக்கலாம் அத்துடன் கலைக்கப்படுவதான சங்கத்தின் சொத்துக்களைப் பகிர்ந்தளிக்க அனுமதிக்கலாம்.

(எ) ஒடுக்குனருக்கான வேதனமொன்றைப் பணிக்கலாம்.

(ஏ) இதன் 53 (1) (ஈ) பிரிவிற் குறிப்பிடப்படுவதான பிணக்குகள் தவிர்ந்த ஒடுக்குனருக்கும் மூன்றாம் ஆளொருவருக்கும் இடையிலான பிணக்கொன்றெனின் பிணக்கு மத்தியஸ்தரின் தீர்ப்புக்குத்தான் கட்டுப்படுவதாய் அம்மூன்றாம் நபர் எழுத்து மூலம் விருப்பம் தருவதன் பேரில் பிணக்கு விசாரணையொன்றிற்கு ஏற்பாடு செய்யலாம்.

கட்டளைகளை செயற்படுத்தல்.

55. (1) இதன் 54 ஆம் பிரிவின் கீழான பிணக்கொன்றின் மீது பிணக்கு மத்தியஸ்தரால் எடுக்கப்படும் தீர்ப்பானது இரண்டு பகுதியினரையும் கட்டுப்படுத்துவதாயமைவதுடன் பிணக்கு மத்தியஸ்தரால் வழங்கப்படுவதான அவ்வாறான தீர்ப்பு இப்பிரிவின் கீழ் பதிவாளரால் வழங்கப்பட்ட கட்டளையொன்றினையொத்ததாதல் வேண்டும்.

(2) இதன் 53 ஆம் 54 ஆம் பிரிவின்கீழ் பதிவாளரால் அல்லது ஒடுக்குனரால் வழங்கப்படும் கட்டளையொன்றானது சிவில் நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டதானதாகும். அத்துடன் அவ்வாறான கட்டளையானது அது வழங்கப்பட்டதான குறித்த சங்கத்தின் முகவரி அமைந்துள்ள நீதி நிர்வாக எல்லைக்கான நீதிமன்றத்தால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

எனினும் பதிவு ரத்து செய்யப்பட்டதான சங்கமொன்றிற்குக் கடன் வழங்கிய வங்கியொன்று இதன் 53 அல்லது 54 ஆம் பிரிவின் கீழ் ஒடுக்குனரால் அல்லது பதிவாளரால் வழங்கப்படுவதான கட்டளையொன்றிற்கெதிராக அக்கட்டளை வழங்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சருக்கு மேன் முறையீடொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

(3) பதிவாளரால் அல்லது ஒடுக்குனரொருவரால் வழங்கப்பட்டதான கட்டளையொன்று (இதன் 53 ஆம் அல்லது 54 ஆம் பிரிவின் கீழான) மேன் முறையீடொன்றினைப் பெற்றிராதவிடத்து குறித்த காலவெல்லை முடிவடைவதுடன் நடைமுறைக்கு வருதல் வேண்டும். மேன் முறையீடொன்று குறித்த காலவெல்லைக்குள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுமிடத்து பதிவாளரால் அல்லது ஒடுக்குனரால் வழங்கப்பட்டதான கட்டளை அமைச்சரால் ஊர்ஜிதம் செய்யப்படும்வரை நடைமுறைக்கு வரலாகாது.

சிவில் நீதிமன்றத்தின் நீதித்தத்துவம்.

56. இதன் முன்னர் குறிப்பிட்டதான ஏற்பாடுகளுக்குட்பட்டதாயொழிய இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினைக் கலைப்பது தொடர்பான காரணமெதற்காகவும் சிவில் நீதி மன்றமொன்றிற்கு நீதித் தத்துவம் இருத்தலாகாததாதல் வேண்டும்.

57. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில், அச்சங்கத்தின் வைப்பு நிதியினின்றும் அதன் நிதி, இதன் 40 (2) ஆம் பிரிவின் எற்பாடுகளுக்கமைவாக முதலில் அதன் ஒடுக்கட் செலவுக்காகவும், இரண்டாவதாய், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அல்லது அரசாங்கத்தின் பிணையின் மீது வழங்கப்பட்டதான கடனை இறுப்பதற்காகவும் பின்னர் சங்கத்தின் வேறு பொறுப்புக்களைத்தீர்ப்பதற்காகவும் அதனையடுத்து பங்குப் பணங்களைச் செலுத்தவும். சங்கத்தின் யாப்பு விதிகள் அனுமதிக்கும் பட்சத்தில் சங்கம் கலைக்கப்படுவற்கு நேர் முன்னர் வழங்கப்படாதிருந்த காலம் ஒன்றுக்கு வருடத்துக்கு 6% க்கு கூடாதவாறான பங்கி லாபத்தினை அல்லது உறுப்பினருக்கான இலாபப்பங்கினை வழங்கவும் பயன்படுத்தல் வேண்டும்.

(2) சங்க நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டதன் பின்னர் குறித்த சங்கத்திடம் பணம் வைப்புச் செய்த ஒருவர் தனது உரிமைபற்றி கோராது இருந்திருப்பின், அல்லது அவரது உரிமைகள் எதுவும் பெறப்பட்டில்லாதவிடத்து சங்க நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டதான வர்த்தமானப் பிரசுரம் செய்யப்பட்டு மூன்று மாதத்துக்குள் அல்லது அவ்வாறான எந்தவோர் உரிமைக்காகவும் நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல் இயலாததாதல் வேண்டும்.

(3) சங்க நிதி இதன் 1 ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்டதன் பின்ரும், இதன் (2) ஆம் உட்பிரிவின் கீழான கோரிக்கைக்காக செலுத்தப்பட்ட பின்னரும் எஞ்சியிருப்பின் அத்தொகையானது அச்சங்கம் கலைக்கப்படுவதற்கு நேர் முன்னர் பதவிவகித்த அலுவலர்களின் விருப்பத்துடனும் பதிவாளரின் அனுமதியுடனும் உள்ளூர் அல்லது பொது தேவையொன்றிற்காகப் பயன்படுத்தப்படலாம்.

சங்க நடவடிக்கை ஒடுக்கப்பட்ட மூன்று மாத காலத்துள் அவ்வாறானவர்களால், பதிவாளரின் அனுமதியுடன் எஞ்சிய பணம் பொதுத் தேவையொன்றிற்குப் பயன்படுத்தத் தவறுமிடத்து பதிவாளர் அவ்வெஞ்சிய தொகையை வங்கியொன்றில் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் வைப்புச் செய்தல் வேண்டும்.

இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆக்கப்படுவதான உபநிதியமொன்றிற்கு (அவ்வாறான எஞ்சிய பணம்)ப் பதிவாளரால் பின்னர் வைப்புச் செய்யப்படல் வேண்டும். பின்னர் அவ்வைப்புக்கள் அந்நிதியத்தின் ஒழுங்கு விதிகள் ஏற்பாடு செய்வதான விடயங்களுக்கு ஒழுங்கு விதிகள் கூறும் வகையாகப் பதிவாளர் தற்றுணிபின் பேரில் செலவீடு செய்யலாம் எனினும் அவ்வாறான வைப்புகளுக்காக நிதியம் பெறும் வட்டித்தொகை கூட்டுறவு நிதியத்தில் சேர்க்கப்படல் வேண்டும்.

## X ஆம் அத்தியாயம்

### பிணக்குகள்

58. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று தொடர்பாக—

(அ) அதன் அங்கத்தவர், முன்னால் அங்கத்தவர்களுக்கிடையில் அல்லது அங்கத்தவர் மூலமாக முன்னாள் அங்கத்தவர் மூலமாக, மரணித்த அங்கத்தவர் மூலமாக அல்லது சங்கமொன்றிடமிருந்து உரிமை கோரி நிற்போர் மூலமாக அல்லது இடையிலான பிணக்குகள் அலுவலர், ஊழியர், முன்னாள் அலுவலர் ஊழியர், அல்லது மரணித்த ஊழியர், அலுவலர், உறுப்பினர் என்புவரின் பின்னுரித்தானவர், சட்டபூர்வ பிரதிநிதிகள் என்போருக்கிடையிலான பிணக்குகள் ; அல்லது

(ஆ) சங்க உறுப்பினர், முன்னாள் உறுப்பினர் அல்லது சங்க உறுப்பினர் மூலமான, அல்லது முன்னாள் உறுப்பினர் மூலமான அல்லது மரணித்த உறுப்பினர், அவர் சார்பாக கோரி நிற்போர் என்பவருக்கும் சங்கத்துக்கும் இடையிலான அல்லது சங்க செயற் குழுவிற்கிடையிலான அல்லது சங்க அலுவலர், ஊழியர், முன்னாள் அலுவலர் ஊழியர், மரணித்த உறுப்பினர், அலுவலர், ஊழியர், முன்னுரித்துடையோர், சட்டபூர்வ பிரதிநிதி ஆகியோருக்கும் இடையிலான பிணக்குகள்;

(இ) சங்கத்துக்கும் அல்லது அதன் செயற்குழுவிற்கும் சங்கத்தின் அலுவலர் , ஊழியர், முன்னாள் அலுவலர், ஊழியர், மரணித்த ஊழியர், உறுப்பினர் அவர்களது பின்னுரித்தானவர், சட்டபூர்வ பிரதிநிதிகள் என்பவர்கட்கும் இடையிலான பிணக்குகள் ;

(ஈ) சங்கத்துக்கும் அல்லது அதன் செயற்குழுவிற்கும் -

(i) வேறு சங்கமொன்றின் உறுப்பினராயிருந்து அச்சங்கத்தின் நடவடிக்கைகள் சில மாற்றப்பட்டதன் காரணத்தால் குறித்த சங்கத்தின் உறுப்பினராகிய ஒருவர்.

(ii) 1 ஆம் உட்பிரிவிற் குறிப்பிட்டதான நடவடிக்கைகள் மாற்றப்பட்டதான சங்கத்தின் உறுப்பினர், முன்னால் உறுப்பினர், மரணித்த உறுப்பினர் அல்லது அவரது பின்னுரிமையாளர் கோரி நிற்போர்.

(iii) 1 ஆம் உட்பிரிவிற் காட்டியவாறான நடவடிக்கைகள் மாற்றப்பட்ட சங்க உறுப்பினரின் பின்னுரிமையாளர் அல்லது சட்டபூர்வ பிரதிநிதி என்பவருக்கு இடையிலான பிணக்குகள்.

(உ) சங்கமொன்றுக்கும் பிரிதொரு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றுக்கும் இடையிலான பிணக்குகள் தீர்வுக்காக பதிவாளர் பால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால், அதன் உறுப்பினர், அலுவலர், ஊழியர் அல்லது முன்னால் உறுப்பினர், அலுவலர், ஊழியர், மரணித்த உறுப்பினர், அலுவலர், ஊழியர் என்பவரின் பின்னுரிமையாளர், சட்டபூர்வ பிரதிநிதி அல்லது பெயர் குறித்துரைக்கப்பட்ட ஒருவரிடமிருந்து சங்கத்திற்கு வரவேண்டிய கடன் கொடுப்பனவு அல்லது தண்டப்பணம் என்பவற்றிற்கான கோரிக்கையொன்றானது, அது குறிப்பிட்டவர்களால் ஏற்றுக்கொள்ளப்படினும், மறுக்கப்படினும் இப்பிரிவின் கீழ் சங்கத்தின் நடவடிக்கை தொடர்பான பிணக் கொன்றெனக்கருதப்படல் வேண்டும்.

(2) இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் கிடைக்கப் பெறுவதான பிணக்கொன்றின் பேரில் பதிவாளரானவர் -

(அ) தானே தீர்வு காணலாம் ;
(ஆ) அதனைப்பிணக்கு மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் பால்படுத்தலாம்.

(3) பிணக்கு மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்களால் வழங்கப்படும் தீர்ப்பொன்றிற்கெதிராக, உபவிதிகள் கூறும் வகையினதாய் குறித்த காலத்துக்குள் மேன்முறையீடொன்றினைப் பதிவாளருக்குச்சமர்ப்பிக்கலாம்.

(4) இதன் 3 ஆம் உட்பிரிவின் கீழ் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிப்பவர் அல்லது அவரது பிரதிநிதி யொருவர் அது தொடர்பாய்ப்பதிவாளருடன் நேரடித்தொடர்பு கொள்ளாதிருத்தல் வேண்டும்.

(5) இதன் 2 ஆம் அல்லது 3 ஆம் உட் பிரிவின் கீழ் பதிவாளரால் வழங்கப்படும் தீர்ப்பானது இறுதியானதாகும். அத்தீர்ப்பின் மீது சிவில் நீதிமன்றமொன்றில் விசாரணை மேற்கொள்ளலாகாததாதல் வேண்டும்.

(6) இதன் 2 ஆம் உட்பிரிவின் கீழ் பிணக்கு மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றானது, மேன் முறையீடு செய்யப்படாதவிடத்து, அல்லது செய்யப்பட்டதான மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதன் பேரில் அல்லது அவ்வாறான மேன்முறையீடானது வாபஸ் பெறப்படுமிடத்து இறுதியானதாதல் வேண்டும். அம்முடிவின் மீது சிவில் நீதிமன்றமொன்றில் விசாரணை மேற்கொள்ளலாகாததாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் கீழ் பிணக்கொன்றாய்க் கருதப்படும் விடயம் சம்பந்தமாய் ஏற்பாட்டுச்சட்ட விதிகள் வலுவற்றதாயமைதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் கீழ் பிணக்கு எனக்கருதப்பட்டதானதும் பதிவாளரின் தீர்ப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டதுமான விடயமொன்று தொடர்பாய் பதிவாளரால் வழங்கப்படும் தீர்ப்பு இறுதியானதாகும். அவ்வாறான தீர்ப்பொன்றிற்கெதிராக சிவில் நீதிமன்ற விசாரணையொன்று மேற்கொள்ளலாகாததாதல் வேண்டும்.

(9) இப்பிரிவின் கீழ் உறுப்பினர் எனப்படுபவர் இணை உறுப்பினரையும் உள்ளடக்கும்.

59. (1) இதன் 58 ஆம் பிரிவின் கீழ் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிணக்கொன்றின் மீது அல்லது சமர்ப்பிக்கப்பட்டதான மேன்முறையீடொன்றின் மீது வழங்கப்பட்டதான இதனகத்துப்பின்னர் "தீர்ப்பு" என வழங்கப்படுவதான முடிவு அல்லது பிணக்கு மத்தியஸ்தரால் பிணக்கொன்றின் மீது வழங்கப்பட்டு ஆனால் அப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக மேன்முறையீடு செய்யப்படாததான, இதனகத்துப்பின்னர் "தீர்மானம்" என வழங்கப்படும் முடிவொன்று அப்பிணக்குத்தொடர்பான ஒரு பகுதியினர் மறுபகுதியினருக்கு வழங்க வேண்டியதான தொகையொன்றினைக் குறிக்குமிடத்து அத்தொகை ஏதுமிருப்பின் அவற்றுடன் கூடியதான தொகையினை செலுத்தத்தவறியவர் சார்பாக—

தீர்மானத்தை, தீர்ப்பை அமுலாக்குதல்.

(அ) அவ்வாறான பணம் செலுத்தத்தவறியவர் பெயர், செலுத்தப்பட வேண்டிய தொகை வட்டியென்பன உட்பட்டதான விண்ணப்பம் ஒன்றினை பதிவாளர் அரசாங்க அதிபர்பால் சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது உதவி அரசாங்க அதிபர், அரசவரி உத்தியோகத்தர் அல்லது பிரதி அரசவரி உத்தியோகத்தர்பால் சமர்ப்பித்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) பணம் செலுத்தத்தவறிய குறித்த நபரின் பெயர், செலுத்தப்பட வேண்டிய தொகை, வட்டி என்பன உட்பட குறிப்பிடப்பட்டதான விண்ணப்பமொன்றினைப் பதிவாளர் குறித்த நபர் வதியும் மாவட்டத்தின் அல்லது அவரது அசையும், அசையா, சொத்துக்கள் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அல்லது

(இ) பணம் செலுத்தத்தவறியவரின் பெயர், செலுத்தப்படவேண்டிய தொகை, வட்டியென்பன உட்பட குறிப்பிடப்பட்டதாய், அந்நபர் கடைசியாக வசித்த அல்லது தொடர்பு கொண்டிருந்த இடத்தின் விபரத்துடன் இப்பிரிவிற்கான நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) (அ) இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் பதிவாளரால் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், அரசவரி உத்தியோகத்தர், பிரதி அரசவரி உத்தியோகத்தர் பால் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுமிடத்து குறித்த உத்தியோகத்தர் அவ்வாறான பணம் செலுத்தத்தவறியவரின் அசையும் சொத்துக்களைக் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் குறித்த பணத்தையும் செலவுத்தொகை, வட்டி என்பன இருப்பின் அவற்றையும் ஆக்கிக்கொள்ளத்தத்துவமும் வேண்டுதலும் உடையவராவார்.

(ஆ) மேற்கூறியதான கைப்பற்றல், குறித்த உத்தியோத்தர் தான் உசிதமெனக்கருதும் முறையாக அக்கைப்பற்றலை மேற்கொள்வதுடன் கைப்பற்றப்பட்டதான சொத்துக்களை ஐந்து நாட்களுக்குள் அவ்வாறான பணம் செலுத்தத் தவறியவரின் செலவில் தருவித்து வைத்தல் வேண்டும். குறித்த அந்நபர் தான் செலுத்த வேண்டிய தொகையை செலவுப்பணம், வட்டியென்பன உட்பட கைப்பற்றற் செலவு தரித்து வைக்கப்பட்டதற்கான செலவு என்பவற்றுடன் செலுத்தத் தவறுமிடத்து அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், அரசவரி உத்தியோகத்தர், பிரதி அரசவரி உத்தியோகத்தர் எனும் குறித்த உத்தியோகத்தர் அச்சொத்துக்களைப் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யலாம்.

(இ) அவ்வாறான விற்பனை மூலம் கிடைக்கப்பெற்றதான பணம்,

(1) முதலில் கைப்பற்றல், தரித்து வைத்தல், ஏலமிடல் என்பவற்றால் ஏற்பட்ட செலவிற்கும் அறுதியிடுதல் வேண்டும்.

(2) பின்னர் செலுத்தப்பட வேண்டியதான தொகை, செலவுப்பணம், வட்டி என்பவற்றை இறுக்கப்படல் வேண்டும்.

எஞ்சிய பணமெதுவுமிருப்பின் அதனை அச்சொத்துரிமையாளரிடம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுமிடத்து அந் நீதிமன்றமானது நடவடிக்கை ஆணையொன்றினை அரசவரி உத்தியோகத்தருக்குப் பிறப்பித்து பணம் செலுத்தத்தவறியவரின் அசையும், அசையாச் சொத்துக்களையோ, அல்லது அறவிடப்பட வேண்டியதான தொகைக்குச் சரியானது எனக்கருதும் அதன் ஒரு பகுதியினையோ கைப்பற்றி விற்பனை செய்யும் தத்துவத்தினை அளித்தல் வேண்டும். அவ்வாறான ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் சிவில் நடைமுறைச் சட்டக்கோவையின் 226 முதல் 229 வரையான பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(4) இதன் 1 ஆம் (இ) உட் பிரிவின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றிற்குச் சமர்ப்பிக்கும், சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பமொன்றெனில் நீதிமன்றமானது பணம் செலுத்தத்தவறியவரை நீதி மன்றம் முன் தெரிவாகும்படி அழைப்பாணை விடுப்பதன் மூலம் அந்நபரை நீதிமன்றத்திற்குத் தெரிவாக்கி தான் பணம் செலுத்தத் தவறிய குற்றத்துக்காக விசாரணை தொடராதிருத்தலுக்கான காரணம் எதுவுமிருப்பின் காட்டுமாறு கேட்டல் வேண்டும். பணம் செலுத்தாமல் இருந்தமைக்கான தகுந்த காரணம் காட்டப்படின், அதனை ஏற்று, சிறைத் தண்டனைக்கவசியமற்ற தண்டப்பணம் மட்டும் விதிக்கப்படுவதான குற்றமொன்றினை இழைத்தவர் எனக்கருதி 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றிவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் (அதன் 1 ஆம் உட் பிரிவின் ஆ. ஈ. பந்திகள் தவிர்ந்த) சட்டங்களின் கீழ் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியதான தொகை தண்டப்பணமொன்றாக அறவீடு செய்யப்படல் வேண்டும். அவ்வாறான தண்டனையை வழங்கும் போது நீதிவான் குறித்த சட்டக்கோவையின் கீழ் வழங்கக் கூடியதான கட்டளையெதுவுமிருப்பின் அதனையும் வழங்கலாம்.

(5) இப்பிரிவின் கீழ் பதிவாளரினால் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், பணம் செலுத்தத் தவறியவருக்கு அதுபற்றி, தந்தி மூலம், பதிவுத் தபால் மூலம், அல்லது ஆளொருவர் மூலம், அறிவித்தல் ஒன்றினை வழங்குதல் வேண்டும். எனினும், அவ்வறிவித்தல் கிடைக்கப்பெறாமை இப்பிரிவின் கீழான நடவடிக்கை எதனையும் பாதித்தலாகாது.

(6) பதிவாளரால் வழங்கப்படும் விண்ணப்பத்திற் காட்டப்படுவதான விதந்துரைகள் தொடர்பாய் ஆராயவோ, முடிவெடுக்கவோ, மாவட்ட நீதிமன்றத்திற்கோ, நீதிவான் நீதிமன்றத்திற்கோ தத்துவமளிப்பதாய் இப்பிரிவின் ஏற்பாடுகள் எதுவும் அமையாததாதல் வேண்டும்.

(7) இதன் 3 ஆம் உட்பிரிவின் கீழ் விற்பனை மூலம் பெறப்பட்டதான தொகையும், இதன் 4 ஆம் உட்பிரிவின் கீழ் தண்டனையாகப் பெறப்பட்ட தொகையும் அவ்வாறான நீதிமன்றம் அல்லது நீதிவானால் பதிவாளருக்கு மாற்றப்படல் வேண்டும். பதிவாளரால் பெறப்படும் அவ்வாறான பணம் தீர்ப்பு அல்லது தீர்மானம் கூறும் வகையாகச் செலவிடப்படல் வேண்டும்.

60. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் உறுப்புரிமை கோரி விண்ணப்பிக்கும் ஆளொருவரின் விண்ணப்பம் சங்கத்தினால் நிராகரிக்கப்படுமிடத்து அதற்கெதிராய் விண்ணப்பதாரரால் மேன்முறையீடொன்று பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பதிவாளரின் தீர்ப்பானது இறுதியானதும் சங்கத்தினைக் கட்டுப்படுத்துவதாயும் அமைதல் வேண்டும்.

வேறு சில விடயங்கள் சம்பந்தமாக பதிவாளரே முடிவெடுப்பவராதல்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினரொருவர் முறைப்படி அச்சங்கத்தின் பதவியொன்றுக்குத் தெரிவாகியுள்ளாரா, குறித்த உறுப்பினரொருவர், சங்கத்தின் உறுப்புரிமையை அல்லது பதவியொன்றினை இழந்தவரா, குறித்த சங்கமொன்றின் பொது கூட்டம் முறைப்படி நடைபெற்றுள்ளதா என்பன போன்ற பிரச்சினைகள் எழுமிடத்து பதிவாளரின் தீர்ப்பானது இறுதியானதாதல் வேண்டும்.

## XI ஆம் அத்தியாயம்

### உபவிதிகள்

61. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்கள், அதன் ஏற்பாடுகள் என்பவற்றிற்காகவும், அல்லது அதற்கான தத்துவங்கள் என்பவற்றைப் பெறுவதற்காகவும் தேவையெனப்படும் எல்லா உபவிதிகளையும், மத்திய மாகாண மாகாண சபையின் அமைச்சரானவர் ஆக்கலாம்.

(2) விஷேடமாகவும், இதன் 1 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்கும் ஊறு நேராதவையாக அமையும் அவ்வாறான உபவிதிகளில்—

(அ) சங்கமொன்றினைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமிடத்து பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள், அவ்வாறான விண்ணப்பம் ஒன்றின் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றை வகுத்துரைக்கலாம்

(ஆ) உறுப்புரிமைக்காக விண்ணப்பிக்கும் அல்லது உறுப்பினராகப் பதிவு செய்யப்படும் ஒருவர் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் காலத்துக்குக் காலம் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், சேர்த்துக் கொள்ளல், உறுப்புரிமை பெறுவதற்கு முன்னர் செலுத்த வேண்டிய கட்டணம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதான வேறு தொடர்புகள் என்பவை பற்றிய ஏற்பாடுகளை வகுக்கலாம் ;

(இ) உறுப்பினரொருவர் கேட்டு விலகல், அல்லது நீக்கப்படல் அவ்வாறான கேட்டு விலகல் அல்லது நீக்கம் செய்யப்படுமிடத்து உறுப்பினருக்கான கொடுப்பனவுகள் முன்னாள் உறுப்பினரொருவரின் கடப்பாடுகள் என்பவற்றை வகுக்கலாம் ;

(ஈ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அதிகூடிய உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம்;

(உ) மரணித்த உறுப்பினரொருவருக்கான பெறுமதியை நிர்ணயிப்பதற்கான முறைகள், அத் தொடர்பிலான பெறுமானத்தை வழங்கல் அல்லது ஒப்படைப்பதற்கான ஆளொருவரைப் பெயர் குறித்துரைப்பதற்கான ஏற்பாடுகளை வகுக்கலாம் ;

(ஊ) 30 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் உறுப்பினரொருவரால் வைத்துக்கொள்ளக் கூடியதான அதிகூடிய முதலீடு அல்லது பணம் பாக்கி எல்லைகளை வகுக்கலாம் ;

(எ) கடனொன்றிற்காக, அல்லது முற்பணம் ஒன்றிற்காக விண்ணப்பிக்கும் உறுப்பினரொருவரால் செலுத்த வேண்டியதான கட்டணம் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள், எழுதிக் கையொப்பம் இட வேண்டிய ஒப்பந்தங்கள், சட்டபூர்வப் பத்திரங்கள், மற்றும் ஆவணங்களின் மாதிரிகளை வழங்கப்படும் கடன் அல்லது முற்பணம் என்பவற்றின் காலவெல்லை, தனியொருவருக்காக வழங்கக் கூடியதான அதிகூடிய கடன், அல்லது முற்பணத்தின் எல்லைகள் என்பவற்றை வகுக்கலாம் ;

(ஏ) மட்டுப்படுத்தப்படாத பொறுப்புக்களைக் கொண்ட சங்கமொன்றின் லாபம் பங்கீடு செய்வதில் பின்பற்ற வேண்டியதான நிபந்தனைகள் எதுவுமிருப்பின் அவற்றை வகுத்தலும் வழங்கக்கூடியதான அதிகூடிய லாபப்பங்கீட்டு எல்லையினை வகுத்தலும் ;

(ஐ) பங்குகள், காப்புப் பத்திரங்கள், வேறு வழிகள்மூலம் மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளும் முறைகள், அவ்வாறான வைப்புகளுக்காக வழங்க வேண்டிய வட்டியினையும் ஒழுங்குபடுத்தலாம் ;

(ஒ) உறுப்பினர்களின் பொதுக் கூட்டங்களை நடாத்துதல் அவ்வாறான கூட்டத்திற்கான ஒழுங்கு விதிகள், கூட்டத்திற்குள்ளதான தத்துவங்கள் என்பவற்றை வகுக்கலாம் ;

(ஓ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் பொதுமுகாமையாளர், செயற்குழு அங்கத்தவர், கிளைச் செயற்குழு அங்கத்தவர், என்பவர்களுக்கிருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகளை தொகுக்கலாம் ;

(ஔ) செயற்குழுவின் அங்கத்தவர்கள், அலுவலர்கள் நியமித்தல், இடைநிறுத்தல், பதவி நீக்கல், என்பவற்றிற்கும், செயற்குழுக் கூட்டத்தின் ஒழுங்கு விதிகள், செயற்குழு அல்லது அலுவலர்கள் பால் உள்ள தத்துவங்கள், அவர்களது கடப்பாடுகள் என்பவற்றிற்கான ஏற்பாடுகளை வகுத்தளிக்கலாம் ;

(க) சங்கமொன்று யாப்பு விதிகளை அமைத்துக் கொள்ளத்தக்கதான, அல்லது அமைத்துக்கொள்ள வேண்டியதான விடயங்கள் யாவை என்பது பற்றியும் யாப்பு விதிகள் ஆக்கல், திருத்தம் செய்தல், நீக்கல் என்பவற்றின் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் அவ்வாறான யாப்பு விதிகள் ஆக்குதல், திருத்தம் செய்தல், நீக்கிவிடலின் முன்னர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் என்பவற்றைத் தொகுத்தளிக்கலாம் ;

(கா) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் பேணப்பட வேண்டிய கணக்கு விபரங்கள், பதிவேடுகள், அவ்வாறான சங்கமொன்றினால் குறித்த காலத்துக்கொரு முறை வெளியிட வேண்டிய கணக்கறிக்கை என்பவற்றைத் தொகுத்தளிக்கலாம் ;

(கி) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் கணக்குகள் கணக்காய்வு செய்தல், அவ்வாறான கணக்காய்வுக்கான கட்டணம், என்பன பற்றிய ஏற்பாடுகளை வகுத்தலும் இயங்கும் சங்கங்களின் கணக்காய்வு நிர்வாகம், நிர்வாகத்திற்கான உதவிகள் என்பவற்றையும் வகுக்கலாம் ;

(கீ) கூட்டுறவு விளம்பர நடவடிக்கை, கூட்டுறவுச் சங்க சேவை பயிற்சித் திட்டங்கள் என்பவற்றிற்காக செலவிடுதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவு நிதியத்திற்கு, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று அல்லது வேறு சங்கமொன்று செலுத்த வேண்டியதான அங்கத்துவப் பணம் அவற்றை அறவிடுதல் சம்பந்தமான ஏற்பாடுகளை வகுத்தளிக்கலாம். பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டியவர்கள், சமர்ப்பிக்க வேண்டிய முறைகள் என்பவற்றைத் தொகுத்தளிக்கலாம் ;

(கு) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவேட்டுப் பிரதிகளை உறுதி செய்யும் அலுவலர், உறுதி செய்யும் முறை என்பவற்றிற்கான ஏற்பாடுகளை வகுக்கலாம் ;

(கூ) உறுப்பினர் பெயர்ப்பட்டியல், உறுப்பினர் பங்குகள் வரையறுக்கப்பட்டுள்ளவிடத்து பங்குகள் சம்பந்தமான பெயர்ப் பட்டியல் என்பவற்றைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை வகுக்கலாம் ;

(கெ) ஒதுக்கு நிதியொன்றினை ஏற்படுத்தி பேணுவதற்காகவும் அந்நிதியினின்றும் செலவீடு செய்யக் கூடியதான விடயங்கள், நோக்கங்கள் பற்றியும் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் கீழுள்ள நிதியொன்றினை முதலீடு செய்வது பற்றியதுமான ஏற்பாடுகளை வகுக்கலாம் ;

(கே) சங்கமொன்றிற்கு அல்லது சங்கத்தின் மூலம் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதற் காயமைந்துள்ள யாப்பு விதிகள் அல்லது ஒப்பந்தமொன்றினை மீறியது சம்பந்தமான பிணக்கொன்றில் நிர்ணயிக்கக்கூடிய வகைகள் அவ்வாறான மீறலினால் ஏற்பட்ட நட்டத்தினை ஈடுசெய்தல், நட்டயீட்டினை நிர்ணயித்தல் என்பவற்றிற்கான ஏற்பாடுகளை வகுக்கலாம் ;

(கை) பதிவாளரால் வழங்கப்பட்டதான கட்டளையொன்றிற்கெதிராக மத்திய மாகாண, மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சருக்கு மேன் முறையீடு செய்யக்கூடியதான விடயங்கள், மற்றும் இந்நியதிச் சட்டத்தால் குறித்துரைக்கப்படாத ஏதேனும் விடயமொன்றெனில் அவற்றையும் நிச்சயிக்கலாம் ;

(கொ) இதன் 52 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஒடுக்குனரொருவரால் பின்பற்ற வேண்டிய வழி முறைகள் பிணக்கு மத்தியஸ்தரொருவரினால் வழங்கப்பட்ட தீர்வொன்றிற்கெதிராக மேன்முறையீடு செய்தலுக்குத் தகுதியான சந்தர்ப்பங்களை தொகுத்தளிக்கலாம் ;

(கோ) இதன் 57 ஆம் பிரிவிற் குறிப்பிடப்படுவதான மேலதிக நிதியொன்றை அமைத்துப் பேணுதற்கான ஏற்பாடுகளையும் அந்நிதியிலிருந்து செலவீடு செய்யக்கூடிய விடயங்கள், செலவிடும் முறை என்பவற்றையும் வகுக்கலாம் ;

(கௌ) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழான உபவிதிகள் சம்பந்தமாக மேன் முறையீடு செய்தல், விசாரணை மேற் கொள்ளல், அதன் பால் நடவடிக்கை எடுத்தல் அவை தொடர்பாய் பயன்படுத்த வேண்டிய மாதிரிப்படிவங்கள் செலுத்த வேண்டிய கட்டணம், பின்பற்ற வேண்டிய வழி முறைகள் இது தொடர்பாய் அல்லது இதன் இடைநேர் விளைவாய் எழும் எல்லா விடயங்களையும் தொகுத்தளிக்கலாம்.

(3) மத்திய மாகாணத்தின் மாகாண சபை அங்கீகாரம் பெறாவிடத்து உபவிதிகள் எதுவும் வலுவுடையதாகாதாதல் வேண்டும். அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டமை வர்த்தமானப் பத்திரம் மூலம் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

(4) 3 ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாவதுடன் அவ்வாறான எல்லா உபவிதிகளும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதான வலுவினையும் தத்துவத்தினையும் கொண்டதாதல் வேண்டும்.

## XII ஆம் அத்தியாயம்

### அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய கடன்கள்

அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் சேர வேண்டிய பணத்தை அறவிடல்.

62. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிலிருந்து, அல்லது அவ்வாறான சங்கமொன்றின் உறுப்பினரிடமிருந்து அலுவலரொருவரிடமிருந்து, முன்னாள் உறுப்பினரொருவரிடமிருந்து அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கப் பிணையொன்றின் மீது வழங்கப்பட்டதான கடனொன்றிற்காக அறவிடப்பட வேண்டிய பணம், இதன் 46 ஆம் பிரிவின் கீழ் அரசாங்கத்துக்குச் சேர வேண்டியதான சகல பணமும், குடியரசுக்குச் சேர வேண்டிய பண அறவீடு சம்பந்தமான அரச கடன் வழங்கு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அறவிடப்படலாம். அத்துடன் 40 (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக வேறு நபரொருவருக்கு அல்லது வேறு நபர்களுக்குச் சேரவேண்டிய கடன்களிலும் முன்னுரிமை கொண்டதாக அரச கடன்களின் அறவீடு அமைதல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிலிருந்து அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய இதன் 1 ஆம் உட்பிரிவிற் காட்டியவாறாக அறவீடு செய்யக்கூடியதான கடன் தொகைகள் முதலில் சங்கத்தின் சொத்துக்களிலிருந்து அறவீடு செய்யப்படலாம். உறுப்பினர்களின் பங்குகள் வரையறுக்கப்பட்டதான சங்கமொன்றின் பேரில் வரையறுக்கப்பட்டதான உறுப்பினர் பொறுப்புகளுக்குட்பட்டதாய் உறுப்பினர்களிடமிருந்து இரண்டாவதாயும் மற்றைய சங்கங்களைப் பொறுத்தமட்டில் அதன் உறுப்பினர்களிடமிருந்தும் அறவீடு செய்யப்படலாம்.

## XIII ஆம் அத்தியாயம்

### பல்வேறு விடயங்கள்

பதிவு செய்தல் சம்பந்தமாகவுள்ள விதிகளின்படி சங்கமொன்றை விடுவிக்க அமைச்சருக்குள்ள விசேட அதிகாரம்.

63. இந்நியதிச் சட்டத்தின் வரையறுக்கப்பட்டவை எவற்றையும் கருத்திற்கொள்ளாது, மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சரானவர், சந்தர்ப்பம் ஒவ்வொன்றிற்கும் ஏற்புடையதாய் விடுக்கும் விசேட கட்டளைகட்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய், சங்கமொன்று பதிவு செய்து கொள்வதற்கு இந்நியதிச் சட்டத்தினால் விதிக்கப்படுவதான ஏற்பாடுகளில் ஏதேனும் சிலவற்றினின்றும் சலுகை வழங்கலாம்.

இச்சட்டத்தின் விதிப்பிரமாணங்க ளிலிருந்து சங்கத்தை விடுவிப்பது அமைச்சருக்குள்ள விசேட அதிகாரம்.

64. மத்திய மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சரால் விடுக்கப்படும் பொதுவான அல்லது குறிப்பான கட்டளையொன்றின் மூலம் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினின்றும் குறித்த ஒரு சங்கத்திற்கோ, அல்லது சங்கங்களுக்கோ சலுகை வழங்கலாம் அல்லது நியதிச்சட்டம் குறிப்பிடுவதான தேதிகளினின்றும், வேறும் விடயங்களினின்றும் மாற்றங்கள் கொண்டதாய் அவ்வேற்பாடுகளை குறித்தவொரு சங்கத்திற்கோ சங்கங்களுக்கோ ஏற்புடையதாக்கலாம்.

"கூட்டுறவு" என்ற சொல்லின் உபயோகத்தை கட்டுப்படுத்தல்.

65. (1) சிங்களமொழியில் "එක්සත්" எனும் சொல்லையோ "සමුපකාර" எனும் சொல்லையோ தமிழில் "ஐக்கிய" எனும் சொல்லையோ "கூட்டுறவு" எனும் சொல்லையோ ஆங்கிலத்தில் "United" என்ற சொல்லையோ "Co-operative" எனும் சொல்லையோ தனது வர்த்தகப் பெயரின் ஒரு பகுதியாக்க் கொண்டதாய், பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினைத் தவிர்ந்த வேறெந்த வர்த்தகத் தாபனமும், மத்திய மாகாண, மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சரின் அனுமதி பெற்றாலன்றி, அவ்வாறான வர்த்தகப் பெயருடன் வர்த்தக நடவடிக்கையெதனையும் மேற் கொள்ளலாகாததாதல் வேண்டும்.

எனினும் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கு முன்னர், ஆளொருவர் மேற்கொண்டதான, அல்லது நடத்தி வந்ததான வர்த்தகம் ஒன்றின் பேரில், அவ்வர்த்தகத்தினை அவ்வாறான ஆள் அல்லது அவரது சட்டபூர்வ பின்னுரிமையாளர், வழியுரிமையாளர் அதே வர்த்தகப் பெயருடன் தனது வர்த்தகத்தைத் தொடரும் விடயத்தில் இது வலுவுடையதாகாது.

(2) இப்பிரிவின் கீழ் குறிப்பிட்டதான ஏற்பாடுகளை மீறிய ஆளொருவர் எனின் அவர் நீதிவான் நீதிமன்றத்தினால் நடாத்தப்படும் சுருக்க விசாரணையொன்றன்பின்னர் குற்றவாளியெனக் கருதப்படுமிடத்து ரூபா 500 க்குக் கூடாத தண்டமொன்றிற்கும் அக்குற்றத்தினைத் தொடருமிடத்து குறித்த குற்றத்திற்காகக் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டதினின்றும் அக்குற்றம் தொடர்புபடும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபாய் 50 வீதமான தண்டமொன்றிற்கும் ஆட்படல் வேண்டும்.

*சங்கமொன்றுக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை திருப்பிச் செலுத்தவோ பிற சொத்துக்களை திருப்பிப் பெறவோ பதிப்பாளரால் கட்டளையிடக் கூடுமாதல்.*

66. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் மீது இதன் 44 ஆம் பிரிவின் கீழ் நடைபெறுவதான கணக்காய்வொன்றில் அல்லது 46 ஆம் பிரிவின் கீழான விசாரணையொன்றில் அல்லது 47 ஆம் பிரிவிலான பரிசீலனையொன்றில் அல்லது சங்கத்தின் நடவடிக்கைகள் ஒடுக்கப்படுவதற்கான நடவடிக்கையொன்றின் போது குறித்த சங்கத்தின் அமைப்பு அதன் நிர்வாகம் என்பவற்றில் பங்கு கொண்ட யாதேனும் ஒரு ஆள், அல்லது ஆட்கள், சங்கத்தின் அலுவலர், ஊழியர், முன்னாள் அலுவலர் ஊழியர் ஒருவரிடமிருந்து இந்நியதிச் சட்டத்தின், அல்லது வேறு சட்டமொன்றின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவ்வாறான சட்டத்தின் ஆக்கப்பட்டதான ஒழுங்கு விதிகள் பதிவாளரால் அனுமதிக்கப்பட்ட நிதி நடவடிக்கை விதிகள், பதிவாளரால் அல்லது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பொது ஏற்பாடுகளுக்கு மாறாக சங்க நிதியைப் பயன்படுத்திய வகையால், ஏதேனும் பணம் அல்லது சொத்துக்கள் சங்கத்திற்குச் சேர வேண்டுமெனக் கருதப்படுமிடத்து பதிவாளரானவர் தற்றுணிபின் பேரில் சங்கத்தின் செயற்குழு, அல்லது ஒடுக்குனர், பண வைப்புச் செய்த ஒருவர் அல்லது உறுப்பினரொருவரின் வேண்டுகோளின் பேரில் அவ்வாறான ஆளொருவர், அல்லது பலர், அலுவலர், ஊழியர் என்பவர்களின் நடவடிக்கைகளைப் பரீட்சித்து—

(அ) அவ்வாறான தொகையினை அல்லது அதன் ஒரு பகுதியை பதிவாளர் ஏற்றது எனக்கருதும் வகையில் வட்டித்தொகையொன்றுடன் மீளச் செலுத்துமாறு ; அல்லது

(ஆ) அவ்வாறான சொத்துக்களை அல்லது அதன் ஒரு பகுதியை மீளளிக்குமாறு ; அல்லது

(இ) பதிவாளர் ஏற்றது எனக் கருதும் ஒரு தொகையை தண்டப் பணமாக அச்சங்க நிதிக்குச் சேர்ப்பிக்குமாறு அவர்களுக்கு அல்லது குழுவுக்குக் கட்டளையிடலாம் என்னும் அவ்வாறான கட்டளையொன்றைப் பிறப்பித்தலுக்கெதிராகக் காரணம் எதுவுமிருப்பின் அதனைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பினை அவ்வாள் அல்லது குழுவிற்கு வழங்குதல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்குச் சேர வேண்டியதான பணம், சேர்க்கப்பட வேண்டியதான சொத்துக்கள் என்பவை தொடர்பாய் இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டதான கட்டளையொன்றை நிறைவேற்றாதவிடத்து அச்சங்கம் அமைந்துள்ள, அல்லது குறிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டதான, ஆள், குழு, அலுவலர், ஊழியர் என்பவர் வதியும் அல்லது அவர்கள் தொடர்புகொண்டுள்ள பிரிவிற்கான ஆதிக்கமுடைய நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதன் பேரில், அந்நீதிமன்றமானது சிறைத்தண்டனை வழங்கும் அவசியமற்றதும் தண்டப் பணமொன்றைத் தண்டனையாக்கக் கூடியதுமான குற்றமொன்றிற்கான தண்டப்பணம் அறவிடும் வகையில் அவ்வாறான செலுத்தப்பட வேண்டிய தொகையை அறவிடலாம். இவ்விடயத்தில் 1979 ம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் (1 ஆம் (அ) (இ) உட்பிரிவுகள் தவிர்ந்த) ஏற்பாடுகள் ஏற்புடையதாயமைதல் வேண்டும். இப்பிரிவின் கீழ் நீதிவான் தீர்ப்பளிக்குமிடத்து நீதிவானால் வழங்கக்கூடியதான வேறு கட்டளைகள் இருப்பின் அதனையும் வழங்கலாம். பதிவாளரால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தில் அடங்கியுள்ள விதந்துரைகள் மீது விசாரணை நடாத்தவோ முடிவுகள் எடுக்கவோ நீதிமன்றம் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(3) இதன் 1 ஆம் உட்பிரிவில் காட்டப்பட்ட ஆள் அல்லது குழுவின் மீது வேறு சட்டமொன்றின் கீழ் வழக்குத் தொடருதல், நடாத்திச் செல்லல் என்பவை இப்பிரிவின் கீழ் வழங்கப்படுவதான கட்டளையொன்று காரணமாய் வலுவிழப்பதாகவோ, அல்லது வேறு வகையில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவோ கருதப்படலாகாதாதல் வேண்டும்.

*அங்கத்தவர்களை பெயரிடல்.*

67. சங்கமொன்றின் திறமையான நிர்வாகத்தை உறுதிப்படுத்தவும், அச்சங்கத்திற்கு அரசாங்கம், அரச வங்கியொன்று, கூட்டுத்தாபனம் ஒன்று என்பவற்றால் வழங்கப்பட்ட மூலதனம், அல்லது பணத்தினாலோ பொருட்கள் மூலமோ வழங்கப்பட்ட முற்பணம் என்பவற்றின் பாதுகாப்புக்காகவும் பதிவாளர் அவசியமானதும் உசிதமானதும் எனக்கருதுமிடத்து இந்நியதிச் சட்டம், வேறு நடைமுறைச் சட்டம், சங்க யாப்பு விதிகள் என்பவற்றிற்கு மாறானதாயிருப்பினும், அவ்வாறான பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் செயற்குழுவிற்குத்தான் உசிதமானது எனக்கருதும் நபர்களை அங்கத்தவர்களாகப் பெயர் குறித்துவைக்கலாம். எனினும் பதிவாளரால் நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அச்சங்க செயற்குழு முழு அங்கத்தவர் தொகையின் அரைவாசிக்குக் கூடாததாதல் வேண்டும்.

*நம்பிக்கைக்கு பங்கமேற்படுத்தல் சம்பந்தமாக அலுவலர்களின் பொறுப்புகள்.*

68. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் கணக்குகள் இதன் 44 ஆம் பிரிவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்ட பின்னர், அல்லது இதன் 46 ஆம் பிரிவின் கீழ் விசாரணையொன்று நடாத்தி முடிக்கப்பட்டபின் அல்லது இதன் 47 ஆம் பிரிவின் கீழான பரிசீலனையொன்றின் பின் சங்கத்தின் உறுப்பினர், அலுவலர், ஊழியர் எனும் பாத்தியதையில் சங்கத்தின் பணம், சொத்துக்கள் என்பவற்றைப் பொறுப்பில் வைத்திருந்த சந்தர்ப்பத்தில், அல்லது வைத்திருக்கும்

சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறான பணம், சொத்துக்கள் என்பவற்றின் மீது ஆதிக்கம் கொண்டிருந்த அல்லது கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வாறான பணம், பொருள் என்பவை தன்பால் இருந்ததாக அல்லது இருப்பதாக அல்லது தன்னிடமிருந்து அறவிடப்படல் வேண்டும் என அவ்வாறான உறுப்பினர், அலுவலர், ஊழியர் என்பவர் கையொப்பமிட்டுப் பேணிவரப்பட்ட பதிவேடு, வேறு பதிவுகள் எதுவுமிருப்பின் அவ்வாறான தொகையை முழுமையாகவோ, அதன் ஒரு பகுதியையோ உடன் செலுத்தும்படி அல்லது அவ்வாறான சொத்துக்கான பெறுமதியை செலுத்தும்படி பதிவாளர் விடுக்கும் கட்டளை சட்ட பூர்வமானதாதல் வேண்டும். அவ்வாறான சொத்துக்கான பெறுமதியை செலுத்தும்படி பதிவாளர் விடுக்கும் கட்டளை சட்டபூர்வமானதாதல் வேண்டும். அவ்வாறான கட்டளையொன்றின் பேரில் குறித்த பணம், அல்லது அதன் ஒரு பகுதி செலுத்தப்படாதவிடத்து அல்லது சொத்துக்களின் பெறுமதி செலுத்தப்படாதவிடத்து அல்லது அப்பொருள் சமர்ப்பிக்கப்படாதவிடத்து அவ்வாள் நம்பிக்கைத் துரோகக் குற்றத்திற்கான குற்றவாளியாவதுடன் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் சுருக்க விசாரணையொன்றின் பின்னர் குற்றவாளியெனக் காணுமிடத்து பத்து வருடத்துக்குக் கூடாத சிறைத்தண்டனைக்கும் தண்டப் பணமொன்றிற்கும் ஆளாதல் (அவ்வாறான தண்டனை நீதிவான் நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கும் மேற்பட்டதாயினும்) வேண்டும்.

தகவல்கள் எதையேனும் சமர்ப்பிக்கும்படி பதிவாளரினால் வங்கிக்கு உத்தரவு பிறப்பித்தல்.

69. வேறு நடைமுறைச் சட்டம் எவ்வாறு தேவைப்படுத்தினும், பதிவாளரானவர் தான் அவ்வாறு நடவடிக்கை எடுத்தல் உசிதமெனக் கருதுமிடத்து—

(அ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று, வங்கியொன்றுடன் நடாத்தும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு.

(ஆ) வங்கியுடன் சங்கம் நடாத்தும் வங்கிக் கணக்குகளின் விபரமடங்கிய பதிவேட்டுப் பிரதியொன்றினை வழங்குமாறு.

(இ) சங்கத்தின் செலவிற்காக வழங்கப்பட்டதும் அல்லது சங்கத்தால் வெளியிடப்பட்டதுமான காசோலைகளை சமர்ப்பிக்குமாறும் வங்கியொன்றிற்குக் கட்டளையிடலாம்.

வழக்குத்தொடுத்தல் நடத்தல் மேற்கொள்ள வேண்டியவர்.

70. (அ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் மீது, பரிசீலனையொன்று மேற்கொள்ளல், விசாரணை நடாத்தல், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் XVII ம் பாகத்திற்கமைய வழக்கொன்றினைத் தொடரல், அதனை நடாத்தல் என்பன கூட்டுறவுத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவரின் சட்டபூர்வ கடமையாதல் வேண்டும்.

கம்பனிச் சட்டம் தொழிற் சங்கங்கள் சட்டம் பொறுத்தமற்றதாதல்.

71. கம்பனிச் சட்டம், தொழிற் சங்கச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகள், அச்சட்டங்களுக்குக் கொண்டுவரப்படும் திருத்தங்கள் ஏற்பாடுகள் என்பவை இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதான சங்கமொன்றிற்குப் பொறுந்தாததாதல் வேண்டும்.

தற்போதுள்ள சங்க சட்டங்கள் அமைதல்.

72. (1) இந்நியதிச் சட்டம் நடைமுறையாவதில், இலங்கைத் தேசிய பாராளுமன்றத்தின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவு சங்கங்கள் சட்டம் அல்லது அச்சட்டத்தால் ரத்தானதான ஏதேனுமொரு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதான அல்லது பதிவு செய்யப்பட்டதாய்க் கருதப்படுவதான எல்லாச் சங்கங்களும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவையெனக் கருதப்படல் வேண்டும். அவ்வாறான சங்கங்களின் யாப்பு விதிகள் அவை திருத்தப்படும்வரை அல்லது நீக்கப்படும்வரை, இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாயிருக்குமெனின் வலுவுடையதாதல் வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இதுவரை நடைமுறையில் உள்ளதான இலங்கைத் தேசிய பாராளுமன்றத்தின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், அல்லது அச்சட்டத்தினால் ரத்தான வேறு சட்டங்களினால் ஆக்கப்பட்டதான உபவிதிகள் இந்நியதிச் சட்டத்தின் நடைமுறையுடன் வலுவுடையதாயமையும். அவ்வுபவிதிகள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதாய்க் கருதப்படல் வேண்டும். அவ்வாறான உப விதிகளுக்கு ஈடாக இந்நியதிச் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் புதிய உப விதிகள் ஆக்கப்படும் வரை அவை வலுவுடையதாதல் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில், இது வரை நடைமுறையில் இருந்த இலங்கைத் தேசிய பாராளுமன்றத்தின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் அல்லது அச்சட்டத்தினால் ரத்தானதான சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டதான அல்லது வழங்கப்பட்டதாக நம்பப்படுவதான நியமனங்கள், வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாக நம்பப்படும் நியமனங்கள், வெளியிடப்பட்ட அல்லது வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் தொடரப்பட்ட அல்லது தொடரப்பட்டதாகக் கருதப்படும் வழக்குகள் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள், எழுந்துள்ள பிணக்குகள், இந்நியதிச்சட்டத்தின் கீழ் முறையே வழங்கப்பட்ட வெளியிடப்பட்ட, தொடரப்பட்ட அல்லது எழுந்தவைகள் எனக் கருதப்படல் வேண்டும்.

நிதிச் சட்டங்களின் கீழ் காப்புறுதி வைப்புகளுக்குரிய கொடுப்பனவுகளை வழங்காது பயன்படுத்தக் கூடாததாதல்.

73. ஏதேனும் வகையிலான வங்கி நடவடிக்கையொன்றில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் அதன் வைப்பு நிதிச்சட்டத்தின் V பாகத்தின், 11 ஆம் பிரிவின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அப்பிரிவின் கீழான காப்புறுதி செய்யப்பட்டுள்ள சொத்துக்கள், இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறு கூறினும், அவ்வைப்புக்களுடன் தொடர்புடைய செலுத்தலுக்கு மட்டும் பயன்படுவதன்றி வேறு கொடுப்பனவுகளுக்குப் பயன்படலாகாததாதல் வேண்டும்.

நியதிச் சட்டத்திற்கு அமைவாக செயல்படாதற்கான தண்டனை.

74. (1) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக பதிவாளரால் அல்லது அவரால் தத்துவமளிக்கப்பட்ட ஒருவரால் வழங்கப்பட்ட நியமனமொன்றிற் குறிப்பிட்ட நடவடிக்கையை மேற்கொள்ள, அல்லது தேவையான தகவல்களை வழங்க, வேண்டுமென்றே உதாசீனம் செய்யும் அல்லது மறுக்கும் பதியப்பட்ட சங்கமொன்று, அல்லது அலுவலரொருவர், ஊழியர் ஒருவர், உறுப்பினர் ஒருவர் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வழங்கப்பட்டதான, தெரியப்படுவதற்கான கட்டளை நியமனமொன்று , எழுத்து மூலமான சட்ட பூர்வ கட்டளையொன்று என்பவற்றிற்கு வேண்டுமென்றோ அல்லது தகுந்த காரணமின்றியோ கீழ்படிய மறுத்தல் அல்லது இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தத்துவமளிக்கப்பட்டவரொருவரால் ஏதேனும் தகவல்களை வழங்கும்படி விடுவிக்கப்பட்ட கட்டளையொன்றின் பேரில் அவ்வாறான தகவலைத் தரத்தவறும் சகலரும் அல்லது வேண்டுமென்றே பொய்த்தகவல் தரும் அல்லது பொய்த் தகவல்கள் தரும் பதிவு செய்யப்பட்ட சங்கம், அலுவலர், ஊழியர், உறுப்பினர் என்போர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்று புரிந்ததற்கான குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இதன் 1 ஆம் உட்பிரிவிற் காட்டியதான தவறிழைத்தவரெவரும் நீதிவான் நீதி மன்றமொன்றின் சுருக்க விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படுவதன் பேரில் இரண்டு வருடத்துக்குக் கூடாத சிறைத்தண்டனை அல்லது 12,000 ரூபாய்க்குக் கூடாத தண்டப் பணம் ஒன்றிற்கு அல்லது இவ்விரு தண்டனைக்கும், அவ்வாறான தீர்ப்பு வழங்கள் நீதிவான் நீதிமன்ற அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதெனினும் உட்படல் வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று இந்நியதிச் சட்டத்தின் கீழான குற்றமொன்று புரிந்துள்ளதான சந்தர்ப்பத்தில், அவ்வாறான குற்றம் சங்கத்தின் கடப்பாடொன்றினை நிறைவேற்றத் தவறிய குற்றமெனில் அக்கடப்பாட்டினை நிறைவேற்ற யாப்பு விதிகளினால் பொறுப்புடையவர்களாக, அலுவலர் அல்லாதவிடத்து சங்க செயற்குழு அங்கத்தவர்கள் அனைவரும் அதில் எவரேனும் தான் அக்குற்றம் பற்றி அறிந்திருக்க வில்லையென்பதையோ அல்லது அக்குற்றம் நேராமைக்காக தன்னாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டதாக நிரூபிக்காதவிடத்து தனித்தனி அக்குற்றத்தினை புரிந்தமைக்கான தண்டனைக்கு உட்படல் வேண்டும்.

பதிவாளரின் செயல்பாடுகள் சம்பந்தமான பாதுகாப்பு.

75. இந்நியதிச் சட்டத்தின் கீழான நடவடிக்கையொன்றினை, மேற்கொள்வதில் அல்லது அதன் ஏற்பாடொன்றினை நிறைவேற்றுகையில், நன்நோக்குடன் மேற்கொண்டதான செயலொன்றிற்காக அதனை மேற்கொண்ட, பதிவாளர், பிரதி ஆணையாளர், சிரேஷ்ட உதவி ஆணையாளர், உதவியாணையாளர் அல்லது இந்நியதிச் சட்டத்தின் 44, 46, 47, 49, 52, 66, 67 ஆம் பிரிவுகளின் கீழ் பதிவாளரால் முறைப்படி தத்துவமளிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவொருவர் என்பவருக்கெதிராக எந்தவொரு சிவில் அல்லது குற்றவியல் வழக்கினையும் தாக்கல் செய்யலாகாததாதல் வேண்டும்.

76. அமைச்சரால் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் விசேட கட்டளையின் மூலம் அல்லது அவரால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்படக்கூடிய இந்த நியதிச் சட்டத்திலுள்ள பிரமாணங்களுள் ஏதேனுமொரு பிரமாணத்தின்படி—

(அ) சங்கத்தின் வகுப்பொன்று ;

(ஆ) சங்கமொன்று விடுவிக்க முடியும்.

77. சொற்பொருட்கோடல்.— இந்நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலொழிய,

"யாப்பு விதிகள்" எனப்படுவது, தற்போது நடைமுறையிலுள்ளதான பதிவு செய்யப்பட்ட திருத்தங்களுமாகும்.

"செயற்குழு" எனப்படுவது, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நடவடிக்கை தொடர்பான முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான நிருவாகக் குழுவாகும். அத்துடன் பதிவு செய்யப்படும் சங்கமொன்றின் பணிப்பாளர் சபையும் இதன் 48 ஆம் பிரிவின் கீழ் பதிவாளரால் நியமிக்கப்படுபவர்களும் அடங்குவர்.

"அலுவலர்" எனப்படுபவர், சங்கத்தினது அல்லது கிளையொன்றினது தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், முகாமையாளர், சங்கச் செயற்குழு அங்கத்தவரொருவர் அல்லது சங்கத்தின் நடவடிக்கை சம்பந்தமான கட்டளைப் பிறப்பிக்கத் தத்துவமளிக்கப்பட்டவர் என்போர் அடங்குவர்.

"வங்கி" எனப்படுவது—

(அ) பொது மக்களின் கேள்வி வைப்புகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது கேள்வி வைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதான நடவடிக்கையில் ஈடுபடும் இலங்கைக்குள்ளான சட்ட ரீதியான அல்லது சட்ட ரீதியாக்கப்படாத ஒருவர் அல்லது பலர்.

(ஆ) அரசாங்கத்திற்காக செயற்படுவதும், கடன் முற்பணம் என்பவற்றை வழங்கல் அல்லது முதலீடு செய்தல் அல்லது பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்கும் (ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் அல்லது வேறு வகையாகத் தாபிக்கப்பட்ட தான்) ஏதேனுமொரு நிதித்துவ தாபனம் அல்லது தாபனங்கள்.

(இ) இலங்கை அபிவிருத்திக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கையின் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்.

(ஈ) கூட்டுறவு அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சரின் அனுசரணையுடன் நிதியமைச்சரால் வர்த்தமானப் பத்திரிகைப் பிரசுரமொன்றின் மூலமான கட்டளையொன்றின் மூலமும் இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வங்கியொன்று என அறிவிக்கப்படுமொருவர் அல்லது பலர்.

"ஆரம்பச் சங்கம்" எனப்படுவது, இதன் 3 (1) ஆம் பிரிவின் ஆ, இ, ஈ பந்திகளில் குறிப்பிடப் படுவதான நோக்கம் ஒன்றுடன் அல்லது குறித்தவொரு நடவடிக்கைக்காக தாபிக்கப்பட்டதான சங்கம் தவிர்ந்த ஏனைய பதிவு செய்யப்பட்ட சங்கங்களாகும்.

"உப விதிகள்" எனப்படுவது, இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதான அல்லது ஆக்கப் பட்டதாகக் கருதப்படும் உப விதிகள்.

"பதிவாளர்" எனப்படுபவர், இந்நியதிச் சட்டத்தின் கீழ் மத்திய மாகாண, மாகாண சபையின் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப் படுமொருவரைக் குறிக்கும்.

"பதிவு செய்யப்பட்ட சங்கம்" எனப்படுவது, இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் சங்கமொன்றினைக் குறிக்கும்.

"உறுப்பினர்" எனப்படுபவர், சங்கமொன்று பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பத்தில் கலந்துகொள்ளும் ஆளொருவர் அல்லது பதிவு செய்யப்படுவதன் பின்னர் யாப்பு விதிகள், உப விதிகள் என்பவற்றிற்கமைய உறுப்பினராய் சேர்த்துக்கொள்ளும் ஆளொருவர்.

"அமைச்சர்" எனப்படுபவர், இந்நியதிச் சட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கடமைகளைப் புரிவதற்காக நியமிக்கப்படுமொருவரைக் குறிக்கும்.

*01—393*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.